பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 198 வைகாசி 32ஆம் நாள் சனிக்கிழமை 15 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
BBA
(Bachelor of Business Administration)
Leading to MBA
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# பிரபாகரனுக்கு நிகர் வேறு எவரும் இல்லை

## இஸ்லாமியப் பயங்கரவாதிகளை அவருடன் ஒப்பிடாதீர் – மைத்திரிக்கு ஹக்கீம் பதிலடி



கொழும்பு, ஜூன் 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நிகர் அவரே ஆவார். இலங்கையில் இனிமேல் எவரும் பிரபாகரன் ஆகிவிட முடியாது. பிரபாகரனுடன் இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒப்பிடுவது அறிவீனம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களின் மத்தியிலிருந்து பிரபாகரன் உருவாக இடமளிக்க வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது அபத்தமான ஒன்று. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். 19

## வலி.வடக்கு இடப்பெயர்வு 29 ஆண்டுகள் பூர்த்தி

### துர்க்கை அம்மன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலி.வடக்கிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து இன்றுடன் 29 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் 19

## ஸஹ்ரானின் ஆயுதப் பிரிவு பொறுப்பாளர் நாலாம் மாடியில்

### பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி ஸஹ்ரானின் ஆயுதப் பிரிவுக்குப் பொறுப்பான அஹமட் மில்ஹான், சவுதி அரேபியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு நான்காம் 19

## ஆவாக் குழுவுடன் பேச்சுக்குத் தயாராம்



யாழ்ப்பாணம், ஜூன் 15

எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி ஆவாக் குழுவுடன் கலந்துரையாடுவதற்குத் தயாராகவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் தொடருந்து நிலைய அதிபர் மீதான தாக்குதலுக்கு பதிலளிக்குமுகமாக ஆளுநர் இவ்வாறு 19

## தலதாமாளிகை தகர்க்கப்பட்டதற்காக இந்துக் கோயில்களை அழிக்கவில்லை

### இந்துக்கள் வாழும் பகுதியில் புத்தர் சிலையும் வைக்கோம் என்கிறார் அத்துரலிய ரத்னதேரர்



யாழ்ப்பாணம், ஜூன் 15

தலதாமாளிகை அன்று தகர்க்கப்பட்டதற்காக நாம் இந்துக் கோயில்களை பதிலுக்கு அழிக்கவில்லை. இந்து மக்கள் வாழும் பகுதியில் புத்தர் சிலைகளும் அமைக்கப்படாது. அவ்வாறு அமைக்கப்படும் புத்தர் சிலை 06

## சுற்றுலா செல்லும் தலைவர்கள் நாட்டுக்கு இனித் தேவையில்லை

### டிலான் பெரேரா சாட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 15

சுற்றுலா செல்லும் தலைவர்கள் நாட்டுக்கு இனித் தேவையில்லை. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வெளிநாடு சென்றுள்ள நிலையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்து- பௌத்த 19

## ரிசாத், ஹிஸ்புல்லா, அஸாத் சாலி மூவரையும் சிறையில் அடையுங்கள்

### அத்துரலிய தேரரின் அடுத்த ஆட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 15

அமைச்சுப் பதவி மற்றும் ஆளுநர் பதவிகளைத் துறந்துவிட்டார்கள், என்பதற்காக ரிசாத் பதியுதீன், ஹிஸ்புல்லா மற்றும் அஸாத் சாலி ஆகியோரை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் மூவரையும் அரசு உடனடியாகக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார். 19

## மதுவிற்பனை நிலையங்கள் மூடப்படும்

கொழும்பு, ஜூன் 15

நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இரண்டு நாள்களுக்கு மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படுமென அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொசன் போயா தினத்தை முன்னிட்டே 19

## சட்டவிரோத கருத்தடை விவகாரத்தில் தாதியர்களின் வாக்குமூலத்தால் திருப்பம்

கொழும்பு, ஜூன் 15

சிசேரியன் மகப்பேற்று சத்திர சிகிச்சைகளின் இடைநடுவே, மருத்துவர் ஷாபி சிஹாப்தீன் பெண்களுக்கு சட்ட விரோதமாக கருத்தடை அல்லது பலோப்பியன் குழாய்களில் தடையை ஏற்படுத்தும் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதை தாம் ஒருபோதும் காணவில்லை என்று குருநாகல் மருத்துவமனையின் சத்திரசிகிச்சைக் கூட தாதியர்கள் 69 பேர் குற்றப்புல 19

## மீண்டும் சூடு பிடிக்கும் பணிப்பாளர் நியமனம்

### சத்தியமூர்த்தியை நியமிப்பதில் அமைச்சர் ராஜித விடாப்பிடி

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக, யாழ்ப்பாணம் போதனா 19

## முன்னணியுடன் இணைவோம் நம்பிக்கை இருக்கின்றது

### என்கிறார் விக்னேஸ்வரன்



கிளிநொச்சி, ஜூன் 15

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் சேர்ந்து செயற்படுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். கிளிநொச்சியில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற விக்னேஸ்வரனிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 19

## ஓ.எல், புலமைப் பரிசில் தேசியமட்ட தரப்படுத்தல் முடிவுகள் வெளியிடப்படாது

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை என்பவற்றின் தேசிய மட்ட தரப்படுத்தல் முடிவுகள் இனி வெளிப்படுத்தப்படமாட்டாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை என்பவற்றின் தேசிய மட்ட தரப்படுத்தல் இனிவரும் காலங்களில் வெளியிடப்படமாட்டாது. அதனூடாக மாணவர்களுக்கு ஏற்படும் மனத்தாக்கத்தைக் குறைக்கவே 19

## பாடசாலைகளில் வைபை வலயம்

கொழும்பு, ஜூன் 15

நாட்டிலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைக்கு அருகலை வலயம் (வைபை) அமைக்கும் பணி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

உயர்தரம் பயிலும் மாணவர்களுக்கு மடிகணினி வழங்கப்படவுள்ளது. அவர்கள் பாடசாலை வளாகத்துக்குள் இலவசமாக இணையத்தைப் பயன்படுத்துவதற்கான வசதியும் கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்படவுள்ளது. முதல்கட்டமாக ஆயிரத்து 50 பாடசாலைகளுக்கு அருகலை வலயம் அமைக்கும் 19








# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். சனி பெயர்ச்சி அடைய இன்னும் 6 மாதங்கள் இருந்தாலும் அவரது சஞ்சார பலன், பார்வை பலன் ஆறு மாதத்துக்கு முன்பு இருந்தே தொடங்கி விடும் இந்த பலன்களை பரிகாரங்கள் பார்ப்போம்.

இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரை சனியில் இருந்து விடுபடு கிறீர்கள். 12 ராசிக்காரர்களுக்கும் பலன்கள் பரிகாரங்களையும் தனித்தனியாக பார்க்கலாம்.

மேட ராசிக்காரர்களுக்கு சனிபகவான் பத்தாம் வீட்டில் அமர்கிறார். இது தொழில் ஸ்தானம். பத்தாம் இடம் கர்மஸ்தானம் என்பதால் இதை கர்மசனி என்றும் சொல்லலாம். இந்த சனிப்பெயர்ச்சியால் மேஷ ராசிக்காரர்களுக்கு.

மேஷ ராசிக்காரர்களுக்கு சனி பகவான் இருக்கும் இடம் பத்தாம் வீடு என்றாலும் அவரது பார்வை உங்கள் ராசிக்கு 12ஆம் வீடு, 4ஆம் வீடு, 7ஆம் வீடுகளின் மீது விழுகிறது. விரைய ஸ்தானம், சுக ஸ்தானம், களத்திர ஸ்தானங்களின் மீது சனிபகவான் பார்வை விழுவதால் அதற்கேற்ப இரண்டரை ஆண்டுகாலம் உங்களுக்கு பலன்கள் கிடைக்கும்.

ஜீவன சனி பத்தாம் அதிபதி பத்தில் அமர்வது பாதகமில்லை. தொழில் ஸ்தான அதிபதி அவரது வீட்டில் ஆட்சி பெற்று அமரப்போகிறார். உங்களுக்கு பாதகமில்லை. தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய வேலை கிடைக்கும். இந்த சனிப்பெயர்ச்சியால் உடல் நலத்தில் சில பாதிப்புகள் ஏற்படும். குறிப்பாக முதுகு வலி ஏற்படும் கவனம் தேவை. லாபம் அதிகரிக்கும் இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு உங்களுக்கு லாபமோ லாபம் தான். காரணம் சனிப்பெயர்ச்சியோடு குருவின் சஞ்சாரமும் சாதகமாக உள்ளது. அடுத்தடுத்து நிகழ உள்ள ராகு கேது பெயர்ச்சியும் அற்புதமாக உள்ளது.

செய்யும் தொழிலில் வருமானம் கூடும். வேலை செய்பவர்களுக்கு புரமோசன் கிடைக்கும். பாக்கெட்டில் பணம் அதிகரிக்கும். அதே நேரத்தில் யாருக்கும் கடன் தர வேண்டாம். திரும்ப வரும் என்ற உத்தரவாதமில்லை. தோள் மீது சுமை வேலை செய்யும் இடத்தில் அதிக பொறுப்புகள் உங்கள் தோள் மீது சுமத்தப்படும். எதையும் எளிதாக எடுத்துக்கொண்டால் பாரம் கண்ணுக்குத் தெரியாது.

சம்பளம் அதிகரிக்க அதிகரிக்க வேலைச்சுமையும் அதிகரிக்கத்தானே செய்யும். எனவே கவலை வேண்டாம் கணபதியை வணங்க, வேலை செய்யும் இடத்தில் இருக்கும் பிரச்சினைகள் நீங்கும். மரியாதை அதிகரிக்கும் இதுவரை உங்களைப்பற்றிய தவறான பார்வை மாறி பெயர் புகழ் அந்தஸ்து சற்று கூடும். உங்களுக்கென்று சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். எதைச் செய்ய ஆரம்பித்தாலும் எடுத்தோம் முடித்தோம் என்றில்லாமல் சற்று வேகமாக முயற்சி எடுத்தீர்கள் என்றால் எண்ணிய எல்லாம் நல்லதாகவே நடக்கும்.

பேச்சில் கவனம் தேவை பணப்புழக்கம் சற்று தாரளமாக இருந்து வரும். தேவையான விடயத்துக்குத் தேவையான செலவுகளைச் செய்து வரவும். அப்பொழுது தான் வீண் விரையச் செலவுகளைக் கட்டுப்படுத்த முடியும். அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படும். அடிக்கடி பயணங்கள் ஏற்படும்.

பேச்சில் சற்று கவனமாக இருத்தல் வேண்டும். தேவையற்ற விடயங்களைப் பற்றிப் பேசுதல் கூடாது. புது வீடு வாகனம் வாங்க வாய்ப்பு அரச விடயங்கள் சற்று லாபகரமாக இருந்து வரும். இதுவரை அரச விடயத்தில் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் நீங்கி சாதகமான செய்திகள் வந்து சேரும்.

எதைச் செய்ய ஆரம்பித்தாலும் எடுத்தோம் முடித்தோம் என்றில்லாமல் கவனமாக செய்யவும். தொழில் விசயமாக அடிக்கடி வீடு மாற அல்லது ஊர் மாற வேண்டிய அவசியம் வந்து சேரும். எடுக்கும் முயற்சிகளில் சற்று கவனம் தேவை. மனை, வீடு, வண்டி வாகனங்கள் வாங்குவதில் இருந்து வந்த இழுபறி நீங்கி அவ்வகளை வாங்க வேண்டிய சந்தர்ப்பம் அமையும்.

தடைகள் நீங்கும் திருமணத்தில் இருந்த தடைகள் நீங்கி திருமணம் இனிதே நடந்தேறும். சுப நிகழ்ச்சிகளில் அடிக்கடி கலந்து கொள்ள வாய்ப்பு அமையும். கணவன் மனைவி உறவு சீராக இருந்து வரும். காதல் விஷயங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

தாயாரின் உடல் நலத்தில் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும். புதிய நட்புகளால் எதிர்பார்த்த நன்மைகளும் அமையும்.

மாணவர்களுக்கு வெற்றி மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த தடைகள் நீங்கி நல்ல கல்வி பயில வாய்ப்பு அமையும். புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வதில் அதிகக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

வேலையில் இருந்து வந்த தடைகள் கடினமான போராட்டங்களுக்குப் பின் விலகும். போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றி வாய்ப்பும் நல்ல வேலை உத்தியோகமும் அமைய வாய்ப்பு ஏற்படும். தாய்மாமனால் நன்மை நான்காம் வீட்டின் மீது சனி பார்வை விழுவதால் நல்ல வசதியான வீடு ஒரு சிலருக்கு அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.

வழக்குகள் சாதகமாக அமையும். தாய் மாமன்களால் எதிர்பாராத நன்மையேற்படும். உறவினர்களுக்கு கர்ம காரியம் செய்ய வேண்டியிருக்கும் வேலை பார்க்கும் இடத்தில் சுமை கூடினாலும் அதை எளிதில் கையாளுவீர்கள். தந்தையால் விரைய செலவு ஏற்படும். பாதிப்புகள் குறைந்து பலன்கள் அதிகரிக்க காக்கைக்கு எள் சாதம் வைக்கவும்.

# அஷ்டம சனி பரிகாரம்

விண்ணில் இருக்கும் ஒன்பது கிரகங்க ளில் அதி சக்தி வாய்ந்த கிரகமாக சனி கிரகம் இருக்கிறது. ஜாதக கட்டத்தில் ஒவ்வொரு ராசியிலும் இரண்டரை ஆண்டுகள் என 12 ராசிகளையும் கடக்க சனி கிரகம் 30 ஆண்டுகளை எடுத்து கொள்கிறது.

ஜாதகத்தில் சனி ஒரு நபரின் ஜாதகத்தில் அது பெயர்ச்சியாகும் இடங்கள், ராசிகளை பொறுத்து பலன்கள் மாறுபடுகின்றன. அந்த வகையில் எல்லோருக்குமே சற்று கலக்கத்தை ஏற்படுத்தும் "அஷ்டம சனி" பற்றியும், அஷ்டம சனி காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பரிகார முறைகளை பற்றியும் இங்கு தெரிந்து கொள்ளலாம். அஷ்டம சனி என்பது ஒரு நபரின் ஜாதகத்தில் அவர் பிறந்த ராசியிலிருந்து 8ஆம் இடத்தில் இருக்கும் ராசிக்கு சனி கிரகம் பெயர்ச்சியாவதாகும். அஷ்டம சனி ஏற்பட்டிருக்கும் நபர்களுக்குக் இரண்டரை ஆண்டு காலம் பல விதமான பிரச்சனைகள் ஏற்பட்ட வாறே இருக்கும். அடிக்கடி உடல்நல பாதிப்புகள் ஏற்பட்டு நீங்கும். பூர்வ புண்ணிய பலன்கள் அதிகம் இல்லாதவர்கள் விபத்துகளை சந்திக்க நேரலாம்.

வீடுகளில் சுப காரியங்கள் நடப்பதில் தடைகள் ஏற்படும். வழிப்பறி, பணம், நகை கொள்ளை போகுதல் போன்றவையும் சிலருக்கு ஏற்படும். நீதிமன்ற வழக்குகளை சந்தித்து ஒரு சிலர் சிறை செல்லக்கூடிய நிலையும் உண்டாக்கக்கூடியது அஷ்டம சனி.

அஷ்டம சனி காலத்தில் சனி பகவானால் பாதகமான பலன்கள் ஏற்படாமல் இருக்க தினந்தோறும் சனீஸ்வர பகவானின் காயத்ரி மந்திரத்தை துதித்து வர வேண்டும். தினந்தோறும் காலையில் குளித்து முடித்ததும் கருப்பு எள் கலந்த சாதத்தை காக்கைகளுக்கு உணவாக வைக்க வேண்டும். சனி பிரதோஷ தினங்களில் சிவ பெருமான் கோவிலுக்கு சென்று சிவனுக்கு வில்வ இலைகளை சமர்ப்பித்து வணங்கி வர வேண்டும்.





# வெளியாகியது ‘நேர்கொண்ட பார்வை’ படத்தின் முன்னோட்டக் காணொலி

எச்.வினோத் இயக்கத்தில் அஜித்தின் 59ஆவது படமாக உருவாகி வருகிறது ‘நேர்கொண்ட பார்வை’. இந்தியில் அமிதாப்பச்சன் நடித்த ‘பிங்க்’ படத்தின் தமிழ் மறு தயாரிப்பாக இந்தப் படம் உருவாகி இருக்கிறது.

இதில் அஜித் ஜோடியாக வித்யா பாலன், முக்கிய வேடங்களில் ஷ்ரத்தா ஸ்ரீநாத், ஆதிக் ரவிச்சந்திரன், அர்ஜுன் சிதம்பரம், அபிராமி வெங்கடாசலம், ஆண்ட்ரியா தரியங், அஸ்வின் ராவ், சுஜித் சங்கர், டெல்லி கணேஷ் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

இதன் முதல் சுவரொட்டி ஏற்கனவே வெளியாகி வரவேற்பு பெற்ற நிலையில், தற்போது இந்தப் படத்தின் முன் னோட்டக் காணொலி வெளியிடப்பட்டது. வெளியான சில வினாடிகளிலேயே ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை கடந்து வைரலாகி உள்ளது.

இதில் அஜித் பேசும் “ஒருத்தர் மேல விஸ்வாசத்தை காட்ட இன்னொருத்தர ஏன் அசிங்கப்படுத்திறீங்க” என்ற வசனம் ரசிகர்களைக் கவர்ந்து வருகிறது.




ஏனடா… அவனவன் வெயில் கொடுமையில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

தண்ணி இல்லாமல் பல மக்கள் உயிரிழக்கிறார்கள்!

தண்ணி விலைக்கு விற்பனையாகிறது..

உனக்கு என்ன்னான்னா……ஒரே மழை!!!

## twitter

சப்பாணி @manipmp

ஒரு கதவு மூடினால்
ஒரு கதவுதான் திறக்கும்

#லிப்ட்

ஜோக்கர்… @ItsJokker

எங்கு, எதை, எப்படி
பேசுவது என பேசுவதல்ல
“பேச்சுக்கலை”
எங்கு, எதை, எப்படி
பேசக்கூடாது என அறிந்து
பேசாமல் இருப்பதே
“பேச்சுக்கலை”

சிலந்தி™ @nandhu_twitts


நேற்று வரை எதை
படித்தாயோ அதை இன்று
செயல்படுத்து..
நாளை என்ன படிக்க
இருக்கிறாயோ அதை
இன்றே பத்திரப்படுத்து..!!

வந்தியத்தேவன் @kalasal

தந்தைக்கும் மகளுக்குமான
இடைவெளியையும் சேர்த்தே
நிரப்பிவிடுகிறது, பேரனுக்கும்
தாத்தாவிற்குமான உறவு!

Vimal.Suresh@vimal_suresh

சமூகத்தில் வாழ்வதை விட சமூக
வலைதளங்களில் வலம் வர,
அதிக மனமுதிர்ச்சி
தேவைப்படுகிறது!!!




நர்ஸ்:
டாக்டர் அந்த
நோயாளி இரண்டு
தடவை மயக்க ஊசி போட்டும்
மயங்கி விழல…

டாக்டர்
அந்த ஊசி வில்லை மட்டும்
சொல்லுங்க. உடனே அவர்
மயங்கி விழுந்துடுவாரு






© TAMIL THE HINDU

ஓய்வைக் கொண்டாடுங்கள் லெஜண்ட்: யுவராஜுக்கு வாழ்த்து கூறிய ஸ்டூவர்ட் பிராட்





## கார்ல் மார்க்ஸ்



- சமுதாயம் சந்திக்க வேண்டிய இன்னொரு நீதிமன்றம் மக்கள் கருத்து….
- உழைப்புத்தான் எல்லா செல்வங்களுக்கும் மதிப்புகளுக்கும் மூலதனம்….
- எதிரி ஆயுதம் ஏந்தாத வரை விமர்சனம் என்பதே ஆயுதம். ஆயுதம் ஏந்திவிட்டால் ஆயுதம் என்பதே விமர்சனம்
- விஞ்ஞானம் என்னும் அழியா ஒளி அறியாமை என்னும் திரைக்குப் பின்னே பிரகாசிக்கிறது.
- சமூதாய ரீதியில் துணிந்து செயலாற்றும் சக்தி படைத்த வர்க்கம் தொழிலாளர் வர்க்கம் தான்.
- இதுவரை இருந்து வரும் சமுதாயத்தின் சரித்திரமெல்லாம் வர்க்கப் போராட்டங்களின் சரித்திரமே.

## மரண அறிவித்தல்கள்



தோற்றம் 04 . 02 . 1948

மறைவு 12 . 06 . 2019

### நா.வை. குகராசா (சமாதான நீதவான்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி எள்ளுக்காடு (சக்திபுரத்)தில் வசித்துவந்தவரும் தற்போது வேப்பங்குளம், ஓமந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நா.வை.குகராசா (மேனாள் கரைச்சி பிரதேச சபை தவிசாளரும், மேனாள் கரைச்சி தெற்கு கூட்டுறவு சங்கத் தலைவரும், கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலான தன்னார்வ குமுகத் தொண்டர்) 12.06.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லலீதாதேவி (போதனாசிரியர் -ஓய்வு கால்நடை திணைக்களம்) அன்புக் கணவரும், ஓவியா (ஆசிரியர் - பயிலுனர் மகாவலி தேசியக் கல்வியற் கல்லூரி), நித்திலன் (ஊவா வெல்லஸ்ச பல்கலைக்கழகம் - பதுளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரராசா (குமரிவேந்தன் - மின் பொறியியல், கண்காணிப்பாளர் - ஓய்வு), காலஞ்சென்ற அரியராசா (தொலைத் தொடர்பு பரிசோதகர்) மற்றும் பரமராசா (மேனாள் முகாமையாளர் பாற்சபை - கிளிநொச்சி - கனடா), புவனேந்திரராசா கோணேஸ்வரி, சிறில் சாந்தீஸ்வரி ஆகியோரின் உடன் பிறந்தவரும், பசுபதி புஸ்பவதி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் கனகம்மா, அருளப்பு யோகம்மா (ஆசிரியர் - ஓய்வு), கோபால் (காவல்துறை அதிகாரி) மற்றும் வரதராசா சேதுப்பிள்ளை (ஆசிரியை -ஓய்வு-கனடா), சிவஞானசுந்தரம் - பார்வதி, பேரம்பலம் (கணக்காய்வாளர் - ஓய்வு கனடா), துரைராசா (மேனாள் பள்ளி முதல்வர்), குலசிங்கம் புவனேஸ்வரி (ஆசிரியர் -ஓய்வு), மகேந்திரராசா புனிதலீலாவதி, பரமராசா பவானி, காலஞ்சென்ற கந்தையா புவனேந்திரராசா மற்றும் வஸ்தியாம்பிள்ளை சிறில் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதி நிகழ்வு நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.677, செல்வாநகர் (கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்திற்கு அருகில்) அமைந்துள்ள மேற்படி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **குடும்பத்தினர்.**

**077 620 3788, 077 818 3684**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 19 . 01 . 1950

மறைவு 14 . 06 . 2019

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர்

**நா.பிரதீபராஜா** அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னையா நாகமுத்து

நேற்று (14.06.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**விரிவுரையாளர்கள், ஊழியர்கள்**
**புவியியற்றுறை**
**யாழ். பல்கலைக்கழகம்.**

ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



தோற்றம் 10 . 03 . 1946

மறைவு 12 . 06 . 2019

### பொன்னுத்துரை மனோன்மணி (தம்பாமணி)

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், B.S ஒழுங்கை மானிப்பாய் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னுத்துரை மனோன்மணி 12.06.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சற்குணம் மற்றும் விஸ்வலிங்கம் , காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கிருஸ்ணபிள்ளை, மகாலட்சுமி, சிவனேசன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான நல்லையா, சற்குணம், மார்க்கண்டு, யோகம்மா மற்றும் சின்னம்மா, கனக லிங்கம் ஆகியோரின் மச்சினியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, மலர் மற்றும் கண்ணன், ராசாத்தி, தேவரஞ்சினி, கருணாகரன் (தரன்) ஆகியோரின் தாயாரும், யோகராணி, நாகராசா, விசித்திரா, காலஞ்சென்றவர்களான பாலேந்திரன், சிவசுந்தரம் மற்றும் பிரியா ஆகியோரின் மாமியாரும், டினேஸ், நிருஷன், அகல்யா, பிரதாஸ், பிர தீஸ், துஷா, உஷா, ஹம்சவதனி, கேஷாளினி, சன்சீபன், சன்சீகா, டயானி, நித்தியா, விதுஷா, டிஷாலி, மேதன் ஆகியோரின் பாட்டியும், சதுஷன், கேதுஜன், வேதுஜன், ஜீவிகா, ஹரினி, சுபனிஸ், மார்சலோ ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**105, B.S ஒழுங்கை,**
**மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/26025)(11.17)

தகவல்: **குடும்பத்தினர்.**

**077 958 8463**

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 04 . 1938

இறப்பு 13 . 06 . 2019

### சுப்பையா வேலுப்பிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு வன்னி தேவிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா வேலுப்பிள்ளை 13.06.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சின்னம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற கணபதிபிள்ளை பொன்னம்மா மற்றும் கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் மங்கயற்கரசி ஆகியோரின் அன்புக் கணவரும், இலங்கைநாயகி (கனடா), ரவிகுலசிங்கம் (சுவிஸ்), தவச்செல்வி (இலங்கை), றேனுகா (இலங்கை), கிருபாகரன் (சுவிஸ்), வசந்தகுமார் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைசிங்கம் (கனடா), தனரஞ்சினி (சுவிஸ்), இராமச்சந்திரன் (இலங்கை), பிறேமராஜ் (இலங்கை), கார்த்திகா (சுவிஸ்), வினோதா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனும், சண்முகம், முருகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், நல்லம்மா, தாமோதரம்பிள்ளை, கனகம்மா, குணலெட்சுமி மற்றும் பத்மநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, மீனாட்சி, பாக்கியதேவி, பரமநாதன் மற்றும் குணரத்தினம் (ஜேர்மனி), சூரியகலா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜி, லதா, ராதா, சுபா, சாரங்கன், துஷன், தர்ஷன், சிந்து, ஜனா, பிரதீபா, தர்சன், தனுசன், தனேஸ், ரதீஸ், குகதீஸ், துசாந், டலக்சன், தனஸ், நிகிஷா, ஆத்வி, ரவிராச், இசைப்பிரியா, மதுமிதா, தனுசியா ஆகியோரின் அன்புப் பேரனும், லக் ஷனா, லகீஷா, லவிக்ஷா, விரிட்டிகா, பிரணி, தருணி, சபரி, அக் ஷயா, அஷ்வின், அக் ஷயன், கரிஸ், சாருஜன், பவித்திரா, சுஜித்திரா, தணிஷா, ஜசனா, யாழினி, கஸ்வின், ரித்திகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் தேவிபுரம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.13, B.Part. தேவிபுரம்,**
**புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.**

தகவல்: **குடும்பத்தினர்.**

(cs 26010)(13.17)

**ரவி** - மகன் (+413 1992 4139) **தர்ஷன்** - பேரன் (+947 8582 9474)




## பாடசாலை சுற்றுலாவின் பயன்கள்

- பாடசாலை என்ற அழகிய பூங்காதான் பிள்ளையின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் கல்விக் கூடம்.
- ஆரம்பம் முதல் பிள்ளைகள் படிப்புடன் நின்று விடாமல் அனுபவ அறிவுகளைப் பெறும் நோக்கோடு பிள்ளைகளைப் பல நாட்டின் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்வது பாடசாலை நிருவாகத்தின் வழக்கமாகும்.
- அந்த வகையில் ஆசிரியர்களுடன் மாணவர்கள் சுற்றுலா சென்று பல இடங்களையும் பார்வையிடுவதால் பலவற்றை அறியவும் அறிந்தவற்றைப் பயன்படுத்தவும் செய்முறைகள் ஆக்கத்துக்கும் சுற்றுலாக்கள் உறுதுணைபுரிகின்றன.
- சுற்றுலாக்களின் போது அவரவர்கள் தங்கும் விடுதிகளில் பிள்ளைகள் பயம் களைந்து துணிவுடன் கடமைகள் ஆற்றப் பழகுவார்கள்.
- சுற்றுலாக்களின் போது நேர காலத்துக்குச் செய்யவேண்டிய கடமைகள் பழக்க வழக்கங்கள்பலவித விளையாட்டுக்கள் நெருப்பை உருவாக்கல், ஆடைகள் சலவை செய்தல் போன்றவற்றை சிறுவர்கள் தெரிந்துகொள்ள முடிகிறது.
- பல போட்டிகளில் பங்கு பெறவும் மகிழ்ச்சியான நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் தன்மையும் வளர்ச்சியடையும்.
- சுற்றுலாவின் போது பெற்றோரை விட்டு பிள்ளைகள் வேறு வேறு புதிய இடங்களில் நின்றாலும் தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் காரியங்களை ஆற்ற இத்தகைய சந்தர்ப்பங்கள் கைகொடுக்கின்றன.
- பிள்ளைகளின் ஆளுமைப் பண்பு வளர்கிறது.
- பிள்ளைகள் தாமாகவே சில வேலைகளைச் செய்யும் போது மனதிலே உறுதியும் ஆர்வமும் அனுபமும் பிறக்கிறது.
- எல்லோரும் கூடி உறவாடி விளையாடும் போது விட்டுக்கொடுப்பு,பகிர்ந்து உண்ணல், பங்கிட்டு கடமைகளைச் செய்தல்,ஒற்றுமை, மன்னித்தல் போன்ற பண்புகள் வளர்கின்றன.
- தனியே பாடசாலைக் கல்வி அறிவை மட்டும் வளர்க்கிறது.
- வெளியிடங்களில் சென்று பெறப்படும் கல்வியால் பலமுயற்சிகள் செய்யும் ஆக்கத்திறன் வளர்கிறது.
- குறித்த வேலையைத் தன்னால் செய்து முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும் அதனைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறும் ஆற்றலும் பிள்ளைகளிடம் வளரும்.




# மகிழ்வித்தலே வரம்

அது ஒரு காடு. அங்கு பல மரங்கள் வளர்ந்து நின்றன. அங்கிருந்த ஒரு பெரிய மரத்துக்கு நீண்ட நாள் ஆசை ஒன்று இருந்தது. அந்த ஆசையை அது மற்றைய மரங்களுக்கும் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தது. ஒரு நாள் அனைத்து மரங்களும் சேர்ந்து இறைவனைத் தம் முன் அழைத்தன. இறைவனும் மரங்கள் முன்தோன்றி தன்னை அவை அழைத்த காரணத்தை வினவினார்.



அப்போது பெரிய ஆலமரம் "இறைவா,எங்கள் கிளைகளில் கூடு கட்டி வாழும் பறவைகள் எல்லாம் நினைத்த நேரத்தில் வெளியே சென்று எங்கும் சுதந்திரமாக பறந்து திரிகின்றன. எங்கள் நிழலில் இளைப் பாறும் மனிதர்களும் விலங்குகளும் கூட தங்கள் விரும்பப்படி வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் மட்டும் எப்போதும் ஒரே இடத்திலேயே இருக்கிறோம்" என்றது. அரச மரமோ "பிறந்தது முதல் இறுதி வரை நாம் ஒரே இடத்திலேயே இருக்கிறோம். உலகில் என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. ஒரே சலிப்பாக இருக்கிறது"என்றது.

எல்லா உயிரினங்களுக்கும் கால்களை அல்லது இறக்கைகளைக் கொடுத்த நீர் எங்களை மட்டும் ஏன் இப்படிப் படைத்தீர். இது என்ன ஓர வஞ்சனை? என்று கேட்டது பனை மரம்.

அதனைக் கேட்ட கடவுள் கிளைகள் தான் உங்கள் இறக்கைகள் வேர்கள் தான் உங்கள் கால்கள்"என்றார். "வேர்களா எங்கள் கால்கள். இல்லை இவை எம்மைச் சிறைப் பிடித்தி ருக்கும் விரோதிகள் அவை எமக்கு வேண்டாம். மனிதர்களைப் போல எமக்கும் கால்கள் கொடுங்கள்" என்றன மரங்கள். கடவுளோ "மரங்களே! எனது ஒவ்வொரு படைப்புக்கும் ஒவ்வோர் அர்த்தம் இருக்கிறது என்று கடவுள் கூறி முடிக்கு முன் குறுக்கிட்ட முருங்கை மரம்" எங்களுக்கு வேறு விளக்கங்கள் தேவையில்லை. உடனடியாகக் கால்களைத் தாருங்கள்" என்று அடம் பிடித்தது. "சரி உங்கள் ஆசைப்படி இன்று ஒரு நாள் மட்டும் கால்களைத் தருகிறேன். எங்கு வேண்டுமோ அங்கெல்லாம் செல்லுங்கள். பின்னர் வந்து நிரந்தரமான கால்கள் பற்றிக் கூறுங்கள்"என்றார் கடவுள்.

இப்போது மரங்களுக்கு கால்கள் முளைக்க அவை துள்ளித்துள்ளி தமது கிளைகளென்னும் தலையைச் சிலுப்பி சிலுப்பி தம்மிடத்தில் தங்கியிருந்த பறவைகளை எல்லாம் விரட்டி அடித்தன. பாவம் பறவைகள் போக்கிடம் இன்றித் தவித்தன. மரங்களில் அவை கட்டிய கூடுகளில் இருந்த முட்டைகள் எல்லாம் நிலத்தில் விழுந்து சிதறின. மரங்கள் நகர்ந்து சென்று உயர் கட்டடங்களையும் விதம் விதமான வாகனங்களையும் கண்டு பிரமித்தன. "ஆஹா இத்தனை காலம் இவற்றையெல்லாம் அனுபவிக்கத் தவறி விட்டோமே" என்று கூறி ஆர்ப்பரித்தன.

இருட்டு வேளை எல்லா மரங்களும் கடற்கரைக்கு வந்து மணலில் துள்ளிக் குதித்து விளையாடின. மரங்களின் இந்த ஆரவாரித்த விளையாட்டைக் கண்டு அலைகள் ஆச்சரியப்பட்டன. அந்த மரங்களிடம் வந்து அவைகள் இடம்பெயர்ந்து போகும் ஆட்டம் பற்றி விசாரித்து அறிந்து கொண்டன.

"அட பைத்தியக்கார மரங்களே. இறைவனின் வரம் என்று சாபத்தைக் கேட்டு வாங்கி வந்து விட்டீர்கள். உங்களுக்குப் பெருமை சேர்ப்பது காய்களும் கனிகளும் தான். அவற்றைப் பெறுவதற்கு நீங்கள் ஓரிடத்தில் நிலையாக நின்று வேர்கள் மூலம் மண்ணின் சத்தையும் நீரையும் பெறுவதன் மூலமே அது முடியும். உங்கள் கிளைகளில் பறவைகளும் நிழல்களில் மனிதர்களும் விலங்குகளும் தங்கி ஆறுதலடைவர். உதாரணத்துக்கு எங்களைப் பாருங்கள். நாங்கள் இங்கே இருக்கும் வரைதான் எமக்கு மதிப்பு. குழந்தைகள் எம்மைத் தேடி வந்து கால்களை நனைத்து விளையாடுகிறார்கள். மனிதர்கள் மாலை வேளைகளில் இந்தக் கடலின் கரைகளில் அமர்ந்து எம்மையும் எம்மடி மீது மிதந்து வரும் கப்பல் வள்ளங்களையும் ரசிக்கிறார்கள். நாம் இடம்மாறி ஊருக்குள் புகுந்துவிட்டார். சுனாமி எம்மை அழிக்க வருகிறதென்று எம்மைத் திட்டுவார்கள். நாம் மற்றவர்களை அழிப்பது வரமா?மகிழ்விப்பது வரமா? நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள்"என்றன அலைகள்.

அலைகளே நீங்கள் சொல்வது சரிதான். புத்திகெட்டு இப்படி ஒரு வரத்தைப் பெற்று விட்டோம். உடனேயே இறைவனிடம் சென்று அடுத்தவருக்கு உதவும் வரத்தையே எமக்கு மீண்டும் தரும்படி வேண்டுவோம்" எனக் கூற மரங்கள் அலைகளிடம் இருந்து விடைபெற்றன.

திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விகாரி வருடம் வைகாசி மாதம் 32ஆம் நாள் (15.06.2019) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் 12.00 மணி வரையுள்ள திரயோதசி திதியும் விசாக நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

ஸ்ரீ ருத்ரம்

உயர்தர சைவ உணவகம்

SRI rudram
Pure Vegetarian Restaurant

திறப்பு விழா நடத்துவதற்கு இறைவன் திருவருள் கைகூடியுள்ளது.
இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்,
சிவனருள் குடும்பம்

மதவாச்சி மன்னார் வீதி,
திருக்கேதீஸ்வரம் சந்தி,
முள்ளிப்பள்ளம், மன்னார்.

*We cordially invite you all to join us in celebrating the opening of an extraordinary pure vegetarian restaurant on Saturday 15th June 2019 between 10.30am and 12.00pm.*
*Please come and enjoy the varieties of vegetarian cusine.*
*You will also get an opportunity to view our luxury holiday rooms and a beautiful hall to let out for functions, meeting, seminars etc*



Madhavaachi-Mannar Rd,
Thiruketheeswaram Junction
Mullipallam, Mannar.

*We honour your presence,*
***Sivan Arul Family!***

T- 077 363 8149, 077 803 8375

## பதவி வெற்றிடங்கள்

ஓர் இல்லத்தரசியாக குடும்பத்தின் சகல தேவைகளையும் பொறுப்பேற்றுக்கொள்பவர் நீங்களே. உங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்றும் சிறந்ததையே நீங்கள் விரும்புவீர்கள் என்பதும் எமக்கு தெரியும்.

எனினும் அக்கனவை நனவாக்க ஒரு மேலதிக நிதிப்பலம் உங்களுக்கு உதவியாக இருக்கும். எனவே 100 வருடம் அனுபவம் மிக்க சர்வதேச நிறுவனத்துடன் இணைவதன் மூலம் உங்கள் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். உங்களுக்கு வசதியான நேரத்தில் பாதுகாப்பாக தொழில் புரியக் கூடிய தொழில் வாய்ப்பு ஒன்றுக்கு உங்களை அழைக்கின்றோம்.

உங்கள் குடும்பத்துடன் செலவிடும் நேரத்தை தியாகம் செய்யாமல் உங்கள் குடும்பத்துக்காக உயர் வருமானம் ஒன்றை பெறும் வாய்ப்பு.

கல்வித் தகைமை G.C.E O/L & A/L

வயது எல்லை (20 - 55)

முகவரி 62/6, Stanly Road, Jaffna.

T.P 076 285 4387



வங்கி & நிதித்துறையில் அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும்
(பகுதி நேரமாகவும் இணைந்துகொள்ள முடியும்.)

AIA HEALTHIER, LONGER, BETTER LIVES


## மரண அறிவித்தல்கள்



"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

### சிமியோன் அன்ரன் ஜோசப்
(அமலன் மாஸ்ரர்)

பிறப்பு: 19.09.1950
இறப்பு: 14.06.2019

963/7, வளன்புரம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிமியோன் அன்ரன் ஜோசப் (அமலன் மாஸ்ரர்) 14.06.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 5412 641
077 5364 396

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி
### கண்மணி வாமதேவா



யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி கண்மணி வாமதேவா 14.06.2019 அன்று லண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவாவின் அன்பு மனைவியும், அம்சதேவா, இன்பஜோதி, ஜெயதேவா, சந்திரதேவா, இராஜேஸ்வரி, பானுஸ்ரீ, நிலா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வா.சந்திரதேவா (மகன்)

T.P:00442088685166

பிறப்பு
18 . 03 . 1926



இறப்பு
12 . 06 . 2019

### சோமசுந்தரம் ராசமணி

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ராசமணி 12.06.2019 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற இ.மி.ச. ஊழியர்) காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் கனகரட்ணம், விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதீஸ்வரி, மனோரஞ்சிதம், மல்லிகாதேவி, சுதாராணி ஆகியோரின் அன்பு மாமியும் விமோசனா, வைதேகன், கௌதம், சுதாங்கன், கஜீபன், சகிதன், காவியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி முன்வீதி,
தெல்லிப்பளை.

தகவல்: சோ.சிவசுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற இ.மி.ச ஊழியர்)

071 693 6022 / 0049 56017725

## கோடியற்புதா! ஆசீரைப் பொழியுமையா!

ஓடுகின்ற நதியிலுந்தன் கருணை கண்டோம்!
உயரமான மலையிலுந்தன் ஞானம் கண்டோம்
தேடுகின்ற வளமெல்லாம் ஐயா உந்தன்
தேருலாவில் மனங்குளிர அள்ளி எடுத்தோம்!
பாடுகின்ற கடலலைகள் கீதம் மீட்டும்
பாஷையூரில் வீற்றிருந்து கோயில் கொண்ட
கோடியற்புதா! வற்றாத கற்பின் செல்வா!
கையேற்தும் எழையின் மேல் இரங்கி வருவாய்!



கோடி மின்னல் கைவிரித்துக் கூடி ஒளியைக்
கொட்டுகின்ற அருள்முகத்தைக் கண்டு ஆற
தேடி வரும் அன்பர்கள் நெஞ்சத் தவிப்பைத்
தேற்றவொரு மருந்தளிக்கும் பதுவை முத்தே!
ஓடிவந்தோம் பூம்பாதம் கட்டி தழுவி
ஆயிரமாய் முத்தங்கள் மழையாய்ப் பொழிந்து
கூடிவந்தோம் எளியவரின் துயரம் போக்கக்
கருணைகாட்டி வாழவைகொடை முகிலே! அமுதே!

பழிதீர்த்த பிறவிகளின் வன்மம் விளாத்த
பொல்லாத துரோகத்தை மறந்து கருணை
விழியெடுத்து அவருக்கும் அருளைத் தெளித்து
விமோசனம் தந்தவனே! பதுவை முத்தே!
இழிகுணத்தால் பாவப்பட்ட எம்மைக்கை தூக்கி
என்றுமழியா நெறி தந்த மானிட மகனார்
கிழித்தபாதை வெற்றி நடை நடந்து வாழக்
கரந்தூக்கி ஆசீரைப் பொழியும் ஐயா!

*- கவிஞர் மு.சிங்கராயர்*

## தலதாமாளிகை...

களை அகற்றுவதற்கு பொலிஸார் தேவையில்லை. நாமே அதனை அகற்றுவோம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

இந்து - பௌத்த கலாசார பேரவையில் இரண்டாம் மொழி கற்றல் செயற்பாடுகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்து மற்றும் பௌத்த சமயங்கள் நெருங்கிய தொடர்புகளை கொண்டுள்ளன. மதங்கள் அனைத்தும் அன்பையே போதிக்கின்றன. அனைத்து இடங்களிலும் புத்தர் சிலை அமைக்க வேண்டும் என்ற தேவை, எண்ணம் எமக்கு இல்லை. இந்துக்கள் வாழும் இடங்களில் புத்தர் சிலை அமைக்கப்பட மாட்டாது. அவ்வாறு அமைக்கப்பட்டால் அதற்கு பொலிஸார் வரவேண்டும் என்று இல்லை. நாமே அதை அகற்றுவோம். இந்து சமயத்தை பிரதிபலிக்கும் கீதாரசாரம் போன்ற நூல்களை நாமும் கற்றுள்ளோம். மனதை அமைதி படுத்துவதும், மனிதர்களை நல்வழிபடுத்தவும் ஏனைய சமயங்கள் கூறும் விடயங்களை நாமும் பின்பற்றுகின்றோம். (காயத்திரி மந்திரத்தை கூறினார்).

நாங்கள் இனவாதிகளாக செயற்படவில்லை. சில அரசியல் தலைவர்கள்தான் அவ்வாறு செயற்படுகின்றனர். கறுப்பு ஜூலைக்கு காரணமானவர்களும் அவர்கள் தான். அன்று தலதா மாளிகை அழிக்கப்பட்டது. அதற்கான நாம் இந்து கோயில்களை அழிக்கவில்லை. ஆனால் இன்று சிலர் இனவாதத்தை கக்குகின்றனர். ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்ற வெடி குண்டு தாக்குதல் இஸ்லாம் தீவிரவாத அமைப்பால் மேற்கொள்ளப்பட்டது. அப்போது கிறிஸ்தவர்கள் கோபம் கொள்ளவில்லை. ஆனால் இனவாதிகள் பலர் இதற்கு உடந்தையாக உள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புலா மட்டக்களப்பில் தொழில்நுட்ப கல்லூரி அமைப்பதாக தெரிவித்து அரபு கல்லூரியை தனியாக அமைத்தார். இதற்கு சுமார் 100 மில்லியன் நிதி சவுதி அரேபியாவில் இருந்து பெற்றுள்ளார். இப்படியான இனவாத செயற்பாடுகளுக்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம். அவர் அமைத்த அந்த கல்லூரி அரசின் கீழ் மக்களுக்கு பயன்படும் தொழில் நுட்பக் கல்லூரியாக மாறும். அதற்கான நடவடிக்கைகளை எந்த அரசுடன் என்றாலும் இணைந்து மேற்கொள்ளுவோம்.

குருநாகல் மற்றும் மட்டக்களப்பு பகுதியில் இளம் குடும்ப பெண்கள் முதல் குழந்தை பெற்றவுடன் அடுத்த குழந்தைக்கு கரு தரிக்காத அளவுக்கு சிகிச்சை முறை நடைபெற்றது அறிவீர்கள். ஹிஸ்புல்லா ஆசிரியர் நியமனங்களின் போது 80 வீதமானவர்களை முஸ்லிம்களே நியமித்தார். இவ்வாறான இனவாத செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற இடமளிக்க கூடாது. அனைத்து அரசியல் தரப்பினரும் எம்முடன் கைகோருங்கள். நாம் இணைந்து செயற்பட வேண்டும். அடுத்த தேர்தலில் ரிசாட் போன்ற அரசியல் தலைவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் - என்றார்.

(ஒ.5.7)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும்
முன்னாள் பொதுச் செயலாளரும்
கலைப்பீடத்தின் புவியியல் துறையில்
சிரேஷ்ட விரிவுரையாளருமான
**திரு.நா.பிரதீபராசா** அவர்களின்
அன்புத் தந்தையார்

### சின்னையா நாகமுத்து

அவர்கள் நேற்று (14.06.2019) இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
ஆசிரியர் சங்கம்**

**Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Sri Lanka.**

**BBAF 4133 - Project Management**

**4th Examination in Business Administration year 1st Semester – 2017 (repeat)**

Applications are invited for the examination of the above course unit. Candidates can collect the application forms at the Dean's Office, Faculty of Management Studies & Commerce.

The duly filled application forms should be submitted at the Dean's Office, Faculty of Management Studies & Commerce on or before 25.06.2019 and a receipt for Rs. 250/- paid at the People's Bank, University branch should be annexed.

**Please find further details from our website, http://www.maco.jfn.ac.lk/.**

**Registrar
University of Jaffna.
14/06/2019**


### வீடு வாடகைக்கு
வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரம் சிற்பனை வீதியில் வாடகைக்குண்டு
077 394 6826

### காணி விற்பனைக்கு
வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தில். நடராசா வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு
T.P: 077 394 6826

### கார் விற்பனைக்கு
Maruti Suzuki 800 A/C Silky Silver Alloy wheel, Remote key 44000km milage மிகச் சிறந்த நிலையில் NP KS xxxx
தொடர்பு:- 077 0466 755 / 077 424 2327

### விற்பனைக்கு
பாற்பசு விற்பனைக்குண்டு.
021 222 7217

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம், திருமணம் ஆகாத வியாபாரம் செய்யும் 56 வயது மணமகனுக்கு மணமகள் தேவை.
076 417 5498


### வேலையாள்கள் தேவை
யாழ்நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.
076 658 0661

### வேலையாள்கள் தேவை (இருபாலாரும்)
யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் புதிதாக திறக்கப்படவுள்ள உணவகத்திற்கு
- ✓ சமையல்காரர் (கோக்கி)
- ✓ சமையல் உதவி
- ✓ பொதி செய்பவர், உபசரிப்பாளர், ரொட்டி தயாரிப்பவர் போன்றோர் தேவைப் படுகின்றனர்.

சுகாதாரத் திணைக்கள அடையாள அட்டை உள்ளவர்கள் விரும்பத்தக்கது. 076 895 1737

# தீவகத்தில் வெடிபொருள்கள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியை அண்டிய சிறுத்தீவுப் பகுதியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, கடற்படையினரும், சிறப்பு அதிரடிப் படையினரும் இணைந்து நடத்திய தேடுதலின் போது வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. 98 டெட்டனேட்டர்கள், 12 கிலோ சி4 வெடி மருந்துகள் என்பனவே மீட்கப்பட்டுள்ளன.



மீன்பிடி நடவடிக்கைக்காக இவை பாவிக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.
(ஓ.5,106.ரி1)


## மரண அறிவித்தல்கள்

### குணரத்தினம் சிவனேஸ்வரி

**பிறப்பு : 12.08.1951** **இறப்பு : 13.06.2019**



இளவாலை மாரிசன்கூடலை பிறப்பிடமாகவும், 178/1, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் சிவனேஸ்வரி 13.06.2019 வியாழக்கிழமை அன்று வவுனியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வையித்திலிங்கம் பூபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ராசரத்தினம் பகவதி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், குணரத்தினத்தின் அன்பு மனைவியும், தர்மிலா, தனுஷா (பற்றிசியன் தொழில் பயிற்சி நிறுவனம் - IIS City Campus, கணினி ஆசிரியர்) கஜரூபன் (Mercantile பாதுகாப்பு உத்தியோகத்தர், வவுனியா) ஆகியோரின் அன்பு தாயாரும், சந்திரலிங்கத்தின் (கர்கிடங்கு ஆலய பூசகர்) மாமியாரும், நாகேஸ்வரி, நாகராஜா, சிவசிதம்பரம், ஈஸ்வரி (கனடா), இந்திரன் (கனடா), சத்தியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி-கோணேஸ்வரி (கனடா), சறோயினிதேவி-குமாரசிங்கம் (சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல், கொழும்பு, சண்முகானந்த ரெக்ஸ்ரைல்-யாழ்ப்பாணம்), லலிதாதேவி-சிறிகாந்தன் (சுவிஸ்), அமரர் இராயசிங்கம் மற்றும் நிர்மலாதேவி, வைத்திலிங்கம், மனோராணி, ஜெகதாம்பிகை, நாகேஸ்வரி-ஜீவாகரன், அமரர் சத்தியசீலன் (றஞ்சன் ரவல்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிகைள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 382 1158**



### திருமதி யோகம்மா குமாரரத்தினம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, வேலணை ஆத்திசூடி வித்தியாசாலை, யா/வேலணை-சரஸ்வதி வித்தியாலயம்)**

வேலணை வடக்கு மணியகாரர் வீட்டடியினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் இல.33, பிரப்பங்குளம் வீதியினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா குமாரரத்தினம் 14.06.2019 அன்று இறைபதமடைந்துவிட்டார்.
அன்னார் வேலணை வடக்கு மணியக்காரர் வீட்டடியினைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், மண்டைதீவைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் குமார ரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மா (சின்னம்மா) மற்றும் மனோன்மணி, நாகேஸ்வரி, அருமைநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்) புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் குமாரவேல், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் ரேவதி, மச்சேந்திரராசா, காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லத்தம்பி, ஆச்சிக்குட்டி, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.33, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம் எனும் தற்காலிக முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சி.சுதாகரன் (சுதா-சுப்ப சூஸ், ரூபா-நாவலர் வீதி, யாழ்ப்பாணம்).**
**ஆசைப் பெறாமகன்**

**077 315 1593**

## மரண அறிவித்தல்கள்

### முத்துக்குமாரு குணசிங்கம்



**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலை ஆனந்தன் வடலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு குணசிங்கம் 13.06.2019 வியாழக்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-செங்கமலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், திருமதி சிந்தாமணியின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்புக் கணவரும், மங்கையற்கரசி (கனடா), இந்துமதி (கனடா), காலஞ்சென்ற லலிதாமதி மற்றும் தேவராசன் (கனடா) இளங்குகராசன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடேசு மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அபிராமிப்பிள்ளையின் அன்பு மைத்துனரும், சிவசங்கரப்பிள்ளையின் சகலனும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் ச்சண்முகசுந்தரம், ஹனிஷா (கனடா), பாணு (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனராஜி, யுதர்சன், செந்தூர்ராஜ், தசலக்ஸன், பிரியதர்சன், பிரதீபா, விமலதர்சனா வினோத் ஷோபா, சசிராஜ், சரணியா, கீர்த்தனா, றமன்ராஜ், தனயன், தனுசன், தகயவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ரிசான், சமிரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (85/7A.V. Road, Ariyalai, Jaffna ) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சசிராஜ் : 075 203 3295**
**செல்வா : 076 948 1543**
**077 372 3313**

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி பவளரத்தினம் (பவளம்) பஞ்சரத்தினம்



நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளரத்தினம் (பவளம்) பஞ்சரத்தினம் 14.06.2019 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-தங்கரத்தினம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பஞ்சரத்தினத்தின் பாசமிகு மனைவியும், கிருபாமூர்த்தி (நோர்வே), இரஞ்சினி, மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனதேவி (நோர்வே), பற்குணநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமநாதன், நடராஜா, தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும், ரவீனா, டர்ஷன், பகீரதி, மோகன்றாஜ், இளமதி, தாரணி, யோதினி, மயூரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தன்சி, தருணிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்து பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**164/10, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழர்களுக்கு எதிராகவே ஸஹ்ரான் குழு தயார்ப்படுத்தப்பட்டதா?

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட்டால்குருதி ஆறு ஓடும்என்றுதான்முன்னர்கூறியிருந்தார் என்பதைக் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் ஒப்புக்கொண்டுள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைவது முஸ்லிம் இளைஞர்களுக்குப் பிடிக்கவில்லை என்றும் அதனால் அத்தகைய முடிவை எதிர்த்து அவர்கள் ஆயுதம் ஏந்துவார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் மற்றும் படுகொலைகள் குறித்து விசாரணை நடத்தி வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னிலையில் சாட்சியம் வழங்கியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். தெரிவுக் குழுவின் முன்பாக நடந்துவரும் விசாரணையில் பலரும் சாட்சியம் வழங்கிவரும் நிலையில் பல தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தகவல்களின் உண்மைத் தன்மை எவ்வளவு என்கிற கேள்வி ஒருபுறம் இருக்க வெளியாகும் தகவல்கள் பலவற்றின் இடையே காணப்படக்கூடிய தொடர்புகள் பல்வேறு சந்தேகங்களையும் எழுப்புகின்றது என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

ஸஹ்ரான் குழுவின் தலைவர் ஸஹ்ரான் ஹாசிமுக்கும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கும் இடையே நெருக்கமான தொடர்புகள் இருந்தன என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்பாகச் சாட்சியமளித்த மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்திருந்தார். அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இதுபோன்ற குற்றச்சாட்டைத் தெரிவித்திருந்தார். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் அவரது சகோதரரான கோத்தபாய ராஜபக்சவும் தான் ஸஹ்ரான் குழுவினரைத் தீனி போட்டு வளர்த்தனர் என்று அவர் கூறியிருக்கின்றார்.

இந்த விடயங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்பட்டால் அல்லது வேறொரு வாய்ப்பு ஏற்பட்டால் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்காகவே ஸஹ்ரான் குழுவினர் முன்னாள் ஆட்சியாளர்களால் வளர்க்கப்பட்டனர் என்று ஏன் நம்பக்கூடாது? இதனை அடிப்படையாக வைத்தே ராஜபக்சாக்களுக்கு நெருக்கமானவரான ஹிஸ்புல்லா வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்பட்டால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுத வன்முறையில் இறங்குவார்கள் என்று தெரிவித்திருப்பதற்கான வாய்ப்புக்களை மறுக்கமுடியாது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நிகழ்ந்த தற்கொலைக் குண்டு வெடிப்புக்களில் கூட தமிழர்கள் அதிகம் வரக்கூடிய தேவாலயங்கள், அதிலும் தமிழர்கள் வரக்கூடிய பூசை நேரங்கள் தாக்குதல் தெரிவுகளாக இருந்துள்ள நிலையில் தமிழர்களுக்கு எதிரான இலக்கோடு ஸஹ்ரான் குழுவினர் வளர்த்தெடுக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்க முடியாது.

கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்திப் பிளவுகளை உருவாக்கி இரு தரப்பினரையும் மோதவிடுவதற்காகவே முஸ்லிம் ஊர்காவல் படைகள் உருவாக்கப்பட்டு அவற்றுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டன என்கிற குற்றச்சாட்டு கொழும்பு அரசு மீது நீண்ட காலமாகவே இருக்கின்றது. இத்தகைய பின்னணியில் ஸஹ்ரான் குழுவினர் தமிழர்களுக்கு எதிரான ஆயுதக் குழுவினராகப் பயன்படுத்தப்படுவதற்காகவே முன்னாள் ஆட்சியாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்டனரா என்கிற விடயம் ஆராயப்பட வேண்டிய ஒன்றே.

இனங்களுக்கு இடையில் பிளவுகளை உருவாக்குவதற்கான நோக்கோடு இத்தகைய குழுக்களை முன்னாள் ஆட்சியாளர்கள் உருவாக்கி வளர்த்தார்களாக என்பது பற்றிய முழுமையான விசாரணைகளும் நடத்தப்படவேண்டும். அதுவே நாட்டின் எதிர்காலத்துக்குச் சிறந்தாக அமையும்.

# அரசியல் மோதல் நாட்டுக்கு நல்லதல்ல

இந்துமதி

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நாடாளுமன்றத்துக்குமிடையே ஏற்பட்டுள்ள இழுபறி நிலை அரசியலில் குழப்பத்தை தோற்றுவித்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன நாட்டின் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட அரச தலைவராக உள்ளார். நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தலைமைதாங்குகின்றார். 2015ஆம் ஆண்டு அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெற்றபோது எவருமே எதிர்பார்க்காத வகையில் மைத்திரிபால சிறிசேனவும் களத்தில் குதித்தார். மகிந்தவின் கீழ் ஓர் அமைச்சராகப் பணி புரிந்த அவர் மகிந்தவுக்கே போட்டியாகக் கிளம்பியமை ஆச்சரியத்தை அளித்தது. அசைக்க முடியாதவரெனக் கருதப்பட்ட மகிந்தவுக்கு முன்னால் இந்தச் சாமானிய மனிதர் எம்மாத்திரம் என்ற எண்ணமும் பலரிடம் எழுந்தது. ஆனால் அவருக்கு ஆதரவைத் தெரிவிப்பதற்குப் பலர் இருக்கத்தான் செய்தனர். ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அந்தக் கட்சியினரின் முழு ஆதரவையும் மைத்திரிக்குப் பெற்றுக்கொடுத்தார். சந்திரிகா அம்மையாரும் இவரது வெற்றிக்காக சிறந்த பங்கை ஆற்றினார். இவர்களை விட கூட்டமைப்பின் ஆதரவும் மைத்திரிக்கு இருந்தது. மலையக மக்களின் கணிசமான ஆதரவும் அவருக்கு வழங்கப்பட்டது. முஸ்லிம் மக்களும் அவரை ஆதரித்தனர். இதனால் வெல்ல முடியாதவர் எனக் கருதப்பட்ட முன்னாள் அரசதலைவரான மகிந்த ராஜபக்ச தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.





### கூட்டு அரசு

அடுத்து இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்த நிலையில் அரச தலைவர் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், தலைமை அமைச்சர் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து ஆட்சியை அமைத்துக்கொண்டன. ஆரம்பத்தில் எல்லாமே நல்ல விதமாகத்தான் நடைபெற்று வந்தன.

காலப்போக்கில் மைத்திரிக்கும், ரணிலுக்கும் இடையில் தோன்றிய விரிசல்கள் மெல்ல மெல்ல அதிகரித்து பெரும் பிளவாக மாறின. தாம் அரச அதிபர் தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் மகிந்த தம்மைக் கொன்றிருப்பாரெனக் கூறியவர்தான் தற்போதைய அரச தலைவர். ஆனால் காலப்போக்கில் அவர் சகலதையும் மறந்து மகிந்தவுடன் உறவுகளைப் புதுப்பிக்க ஆரம்பித்தார். தமது தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் மகிந்தவின் கட்சியை இணைத்துக் கூட்டணி அமைப்பதே அவரது பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. இதில் உள்நோக்கமொன்று இருந்தது. அடுத்த அரச தலைவர் தேர்தலில் தாம் வேட்பாளராக நிற்கும்போது மகிந்தவின் ஆதரவைப் பெறுவதே அந்த நோக்கமாகும். ஆனால் மகிந்த பக்கத்தின் நோக்கம் வேறுவிதமாகக் காணப்படுகின்றது. மகிந்தவின் சகோதரரான கோத்தபாய ஆட்சியைப் பிடிப்பதற்கான கனவுகளுடன் உலா வந்து கொண்டிருக்கிறார். தானே மகிந்த தரப்பின் அரச அதிபர் வேட்பாளர் என்றும் கூறித்திரிகின்றார். ஆனால் மகிந்த இதை ஏற்பாரா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக இன்னமும் அவர் தீர்மானிக்கவில்லையென்று தெளிவாகத் தெரிகின்றது.

### அதிகார முறைகேடு

இந்த நாட்டைப்பொறுத்த வரையில் அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. நீதிமன்றத்தை அவமதித்ததால் சிறைக்குள் தள்ளப்பட்ட ஞானசாரதேரர் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச தலைவரால் விடுவிக்கப்பட்டுள்ளார். கையூட்டுப் பெற்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரும் அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்பட்டு சிறைத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால் தமிழர்களுக்கு இந்த அதிகாரங்கள் உதவவில்லை.

### குற்றச்சாட்டுகள்

தற்போது அரச தலைவருக்குரிய கௌரவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்ற உறுப்பினருடன் பேசுவதற்கு அரச தலைவரால் விடுக்கப்பட்ட அழைப்பு நிராகரிக்க ப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது தெரிவிக்குழுவில் தலையிடுவதற்கு எவருக்குமே அதிகாரமில்லையெனத் தலைமை அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். இவற்றைப் பார்க்கும் போது நிறைவேற்று அதிகாரத்துக்கும் நாடாளுமன்றத்துக்குமிடையே கடுமையான போட்டி இடம்பெறுகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தொடர்பாக வெளிவருகின்ற தகவல்கள் அதிர்ச்சியூட்டுவனவாக அமைந்துள்ளன. பலரது எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஹிஸ்புல்லாவுக்கு ஆளுநர் நியமனம் வழங்கப்பட்டது. இந்த நியமனம் பிழையானதென்பது தற்போது உறுதியாகியுள்ளது. இதனால் இதுவும் அரச தலைவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தெரிவுக்குழுவின் விசாரணையின்போது அரச தலைவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவை நிரூபிக்கப்படுமானால் அவருக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

நாட்டின் தற்போதைய நிலவரங்களைப் பார்க்கும்போது அரசதலைவர் தமது முழு அதிகாரங்களையும் பயன்படுத்த முடியாததொரு நிலை தோன்றியிருப்பதைக் காண முடிகின்றது. ஏற்கனவே அரசியல் குழப்பமொன்றை ஏற்படுத்திய அவர் மேலும் அந்தத் தவறைப் புரியமாட்டாரென நம்பலாம். ஆனால் மோதல் போக்கு நீடிப்பது நாட்டுக்கு நல்ல சகுனமாகத் தெரியவில்லை.

இரசாயனம் சேர்க்காது

# பதநீரை நீண்டகாலம் பாதுகாக்க நடத்திய ஆராய்ச்சி வெற்றியளிப்பு

பனை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 15**

**பதநீருக்கு இரசாயனங்கள் எதுவும் சேர்க்காது இயற்கையாக நீண்ட காலம் பாதுகாத்தல் சம்பந்தமான ஆராய்ச்சி வெற்றியளித்துள்ளது என்று கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்தது.**

பதநீரை நீண்ட காலம் பாதுகாத்தல் தொடர்பாக பேராசிரியர் பொ.நவரட்ணம், அவருடன் இணைந்து பனை ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சியாளர் ப.றோபிகாவும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டனர் என்று நிறுவன பணிப்பாளர் எஸ்.சிறிவிஜேந்திரன் தெரிவித்தார்.

இந்தச் சாதனை சாத்தியப்படாது என்று கருதப்பட்ட நிலையில் இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இது பற்றிக் கடந்த சனிக்கிழமை பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி ஆலோசனைச் சபைக்கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ந.இராசேந்திரன் கலந்து கொண்டார். பதநீரைப் பாதுகாத்தல் பொறிமுறையில் உயிர் இராசயனவியல் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்பால் பனை அபிவிருத்திச் சபை மற்றும் பனை -தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் உவகை அடைகின்றன. இந்த ஆராய்ச்சியின் முழுமையான அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது என்று அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் அவர் தெரிவித்தார். (த)

# பயங்கரவாதிகளுக்கு ரிசாத் உதவவில்லை

முஸ்லிம் காங்கிரஸ் கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 15

ஸஹ்ரான் ஹாசீமுனுடன் ரிசாத் பதியுதீன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், அவர் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தார் என்றும் சுமத்தப்படும் குற்றசாட்டுக்கள் முற்றிலும் பொய் என்று முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21 குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இந்த நாட்டு முஸ்லிம்கள் இனவாத நெருக்குதல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அதன் ஓரங்கமாகவே முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகும் சம்பவம் நிகழ்ந்தது.

ரிசாத் பதியுதீன் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவர் ஸஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தார் என்றும் குற்றம் சுமத்தி அத்துரலிய ரத்ன தேரர் அவருக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததோடு உணவு ஒறுப்புப் போராட்டத்திலும் இறங்கினார்.

ரிசாத் மீது சுமத்தப்பட்டிருப்பது அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டாகும். மன்சாட்சியுடன் கூறுகிறேன். அவர் ஸஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றும், பயங்கரவாதிகளுக்கு உதவி செய்தார் என்றும் கூறப்படுவது இனவாத ரீதியான தாக்குதலாகும்.

அவர் உண்மையில் ஸஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைத் துறப்பதற்கு நான் அனுமதி வழங்கி இருக்கமாட்டேன் - என்றார். (ஒ.5,22)

# பயங்கரவாதத்தின் கோர முகத்தை இலங்கை சென்றபோது பார்த்தேன்!

மோடி தெரிவிப்பு

பல அப்பாவி மக்களைக் கொன்று குவித்த பயங்கரவாதத்தின் கோர முகத்தை இலங்கைப் பயணத்தின்போது கொழும்பில் பார்த்தேன். இவ்வாறு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு நரேந்திர மோடி பயணம் செய்ததுடன், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதலுக்குள்ளான கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தையும் பார்வையிட்டிருந்தார்.

இந்தநிலையில், கிர்கிஸ்தான் நாட்டின் தலைநகரான பிஷ்கேல் நகரில் சங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் இரு நாள் மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தீமைகளில் இருந்து மக்களைக் காப்பாற்ற சங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள நாடுகள் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டியது அவசியமாகும். பயங்கரவாதம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட ஒரு சமுதாயம் உருவாக இந்தியா எப்போதுமே முன்னுரிமை அளித்து வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு நான் சென்றிருந்தபோது கொழும்பு நகரில் உள்ள அந்தோனியார் தேவாலயத்தில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்த பயங்கரவாதத்தின் கோர முகத்தை என்னால் காணமுடிந்தது - என்றார். (ஒ.5,22)

## திருத்தி வாசிக்கவும்

நேற்றைய உதயன் பத்திரிகையின் 14ஆம் பக்கத்தில் வெளியான மீன் வளர்க்கும் போர்வையில் சட்டவிரோத மணல் அகழ்வு எனும் செய்தியின் உப தலைப்பில் மன்னார் பிரதேச சபை என்பது தவறுதலாக மன்னார் நகர சபை எனப் பிரசுரமாகியுள்ளது. தவறுக்கு வருந்துகின்றோம்.

# சீனாவின் செல்வாக்கை கட்டுப்படுத்த இலங்கைக்கு மேலதிக நிதி வழங்கல்

கொழும்பு, ஜூன் 15

தெற்காசிய நாடுகளில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்ளும் வகையில், இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு 30 மில்லியன் டொலரை, வெளிநாட்டு இராணுவ நிதி உதவியாக வழங்குவதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோரியுள்ளது டிரம்ப் நிர்வாகம்.

வங்காள விரிகுடா பாதுகாப்பு முன்முயற்சி என்ற பெயரிலேயே, அமெரிக்க அரசு இந்த நிதியுதவியைக் கோரியுள்ளது.

பிராந்தியத்தில் பல்வேறு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்காக கோரியுள்ள, 64 மில்லியன் டொலருக்கு மேலதிகமாக இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

**காங்கிரஸ் உபகுழு முன் கோரிக்கை**

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், தெற்காசியாவுக்கான புதிய பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டத்துக்கு, அமெரிக்க காங்கிரசின் ஆதரவைக் கோரியுள்ளோம். இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடுகளின், கடல்சார் மற்றும் எல்லைப் பாதுகாப்பு ஆற்றலை கட்டியமுப்புவதற்காக, வெளிநாட்டு இராணுவ நிதி உதவியாக, 30 மில்லியன் டொலரை வழங்குவதற்கு அனுமதி கோருவதாக, தெற்கு மத்திய ஆசியாவுக்கான, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர், அலிஸ் வெல்ஸ் அம்மையார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரசின், ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான வெளிவிவகார உபகுழுவின் முன்பாக நேற்றுமுன்தினம் விளக்கமளிக்கும் போதே, மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

**ட்ரம்ப் அரசின் கடப்பாடு**

'இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில், சட்டத்தின் அடிப்படையிலான ஒழுங்கு, சுதந்திரமான, திறந்த வணிகம், சுதந்திரமான கப்பல் போக்குவரத்து, ஜனநாயகம், பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு ஆகியவற்றை உறுதிப்படுத்த ட்ரம்ப் நிர்வாகம், கடமைப்பட்டுள்ளது. இந்தக் கொள்கைகள், உலகின் சனத்தொகையில் பாதியளவு மக்கள் வாழுகின்ற இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு உதவும். உலக வணிகத்தின் 70 வீதமான பகுதி, இந்தோ-பசுபிக் பெருங்கடல்கள் வழியாகவே, செல்கிறது.

**கடல்களையும், வானையும் அமெரிக்கா பாதுகாக்கும்**

எமது இராஜதந்திர முயற்சி, அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மூலம், இந்தக் கடல்களையும் வான்பரப்பையும், அமெரிக்கா பாதுகாக்கும். அதே வேளை, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் ஏனைய நம்பத்தகுந்த கூட்டாளிகள் மற்றும் பங்காளர்களுடன் இணைந்து, அவர்கள் தமது சொந்தப் பாதையில் சுதந்திரத்தையும், செழிப்பையும் உறுதிப்படுத்துவதற்கு இந்தோ-பசுபிக் நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார சுயாட்சிக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்.

**சீனாவை அனுமதிக்க முடியாது**

நிலையற்ற உட்கட்டமைப்பு திட்டங்களின் மூலம், எமது பங்காளிகளை அழிப்பதற்கு சீனாவையோ அல்லது வேறு எந்த நாட்டையும் அனுமதிக்க முடியாது. அது, பொருளாதாரத்தைக் கடன்களுக்குள் தள்ளும். அல்லது, வெளிப்படைத்தன்மை மற்றும் ஜனநாயக நெறிமுறைகளை பாதிக்கும்.

**இலங்கையுடன் இணைந்து நிற்கிறது**

இலங்கையில் அண்மையில் நடந்த தீவிரவாத தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுடன் அமெரிக்கா இணைந்து நிற்கிறது, அதன் தீவிரவாத முறியடிப்பு ஆற்றலைப் பலப்படுத்துகிறது. இலங்கை அரசின் கோரிக்கையை அடுத்து, எவ்பிஐ துரிதமாக அங்கு சென்றது. தாக்குதல்களை மேற்கொண்ட உள்ளூர் தீவிரவாத அமைப்புகளை செயலிழக்கச் செய்வதற்கு உதவியது.

பன்னாட்டுத் தீவிரவாதத்தை இலங்கை எதிர்க்கின்ற நிலையில், இப்போது நாங்கள் இலங்கை அரசை ஆதரிப்பதற்கான வழிகளை மதிப்பீடு செய்கிறோம். மனித உரிமைகளை மதிக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கைக்கு வலியுறுத்துவோம், என்றும் அவர் தெரிவித்தார்.

**இரண்டு மடங்கு நிதி கோருகிறது**

2020 நிதியாண்டில் தெற்காசியாவுக்கு, பிராந்திய பொருளாதார மற்றும் பாதுகாப்பு உதவிக்காக, 468 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீட்டை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கோரியுள்ளது. இது, 2019இல் கோரப்பட்ட தொகையை விட இரண்டு மடங்காகும். (ஒ.5)

# கைதடி, நாவற்குழியில் 119 வீடுகளுக்கு அடிக்கல்

## சரவணபவன் எம்.பி. நட்டார்

சாவகச்சேரி, ஜூன் 15

தென்மராட்சி கைதடி கிழக்கு இராஜபுரி கிராமத்திலும் நாவற்குழியிலும் வீடுகள் அமைக்க அடிக்கற்கள் நடும் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் முயற்சியால் யாழ்ப்பாண மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.
கைதடியில் தெரிவு செய்யப்பட்ட 39 குடும்பங்களுக்கும் நாவற்குழியில் தெரிவுசெய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கும் மாதிரி வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இரண்டு இடங்களிலும் அடிக்கற்கள் நடுகை செய்யப்பட்டன. நடைபெற்றன. இரண்டு இடங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.
கைதடியில் நடந்த நிகழ்வு, கைதடி கிழக்கு வளர்மதி சனசமூக நிலைய தலைவர் சி.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் உதயன் குழும இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன், தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி.தேவந்தினி பாபு, சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் எம்.ரவிந்திரன், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஆசிரியர் செ.பிரதாப் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-9)

## வடமராட்சி கிழக்கு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பிற்பகல் ஒரு மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இணைத் தலைவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-173)

## அடிக்கல் நடல்

அளவெட்டி, ஜூன் 15
யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி கிராம அபிவிருத்தி சங்க பொது நோக்கு மண்டபத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பின் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஐ-63)

## திறன் வகுப்பறை திறப்பு

சாவகச்சேரி, ஜூன் 15
சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட தரம் 5 வகுப்பு மாணவர்களுக்கான திறன் வகுப்பறை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
கல்லூரி முதல்வர் திருமதி.ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு திறந்து வைத்தார். நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் வ.நடராசா, ஓய்வு பெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-9)







# கடற்படைக் கட்டளைத் தளபதி வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாணத்தின் புதிய கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் எஸ்.எம்.டி கபில சமரவீர, வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் அலுவலகத்தில் நேற்று சந்தித்தார்.
சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தில் காணப்படும் போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்த ஆளுநர், கடற்படையினரின் வசமுள்ள தனியார் காணிகளை மீண்டும் பொதுமக்களுக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினார்.
இதேவேளை காங்கேசன்துறை பிரதேசத்தில் கடற்படையினரின் வசமுள்ள நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு சொந்தமான புனித பூமி மற்றும் மக்களின் காணிகளை விடுவிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டன. மேலும், வடக்கு மாகாணத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் கடற்படையினருக்குமிடையில் சுமூகமான நிலைமைகளைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் இதன்போது கோரிக்கை விடுத்தார். (ஐ-7)

# நாகவிகாரையில் சிறப்பாக இடம்பெற்ற பொசன் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 15
யாழ்ப்பாணம் நாகவிஹாரையில் பொசன் விழா நேற்று முற்பகல் 11 மணியளவில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.
உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.
மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நாகவிஹாரை விகாராதிபதி மீகாஹதயடுரே ஸ்ரீவிமல தேரோ பூஜை வழிபாடுகளை ஆரம்பித்து வைத்தார். இதன்பின்னர், மாவட்டச் செயலர் தேரர்களுக்கு தானம் வழங்கி வைத்தார்.
இந்த நிகழ்வில், யாழ்ப்பாண மாவட்ட செயலக அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (ஐ-106)



# மைதான சீரமைப்பும் பூங்கா அமைப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 15
யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை சனசமூக நிலைய விளையாட்டு மைதானம் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படவுள்ளது.
விளையாட்டு மைதானத்துக்கு அருகில் சிறுவர்களுக்கான பூங்காவும் அமைக்கப்படவுள்ளது என்று மாநகராட்சி மன்றத்தின் இருபதாம் வட்டார உறுப்பினர் இரத்தின சிங்கம் ஜெனன் தெரிவித்தார். இந்த வேலைகளுக்காக 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
விளையாட்டு மைதானம் பத்து லட்சம் ரூபா செலவிலும், சிறுவர் பூங்கா ஐந்து லட்சம் ரூபா செலவிலும் சீரமைக்கப்படவுள்ளன். இந்த அபிவிருத்தி பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
இதேவேளை கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் கொய்யாத் தோட்டம் பகுதியிலும் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது. (ஐ-17)

# 'பாதிக்கப்பட்டோர் பதின்மம் கழிந்தும்' மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 15
"பாதிக்கப்பட்டோர் பதின்மம் கழிந்தும் .." எனும் தொனிப்பொருளில் சுய மதிப்பீட்டு மாநாடு யாழ்ப்பாணத்தில் ரில்கோ விடுதியில் நேற்று நடைபெற்றது.
போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற பாதிக்கப்பட்டோர் தமது வாழ்க்கைப் பயணத்தில் சந்தித்தவற்றையும், சாதித்தவற்றையும் ஆராயும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாட்டை யாழ்ப்பாண றோட்டறிக் கழகமும், தமிழ் மாற்றுத் திறனாளிகள் டேட்டா அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.
வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்தபிள்ளைகள், பிள்ளைகளை இழந்த முதியோர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டன. (த-7)



தமிழர் பாரம்பரியங்களை பாதுகாக்கும்

# கலைஞர்களுக்கு முதன்முறையாக அரச விருது

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கையில்முதன்முறையாகதமிழர்பாரம்பரிய மற்றும் நவீன கலைகளைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கும் கலைஞர்களுக்கு அரசவிருது வழங்கப்படவுள்ளது.

தமிழர் தம் கலைகள் மற்றும் பண்பாட்டை வளர்த்தெடுக்கவும் மரபுவழி மற்றும் நவீன கலை வடிவங்களைப் பேணிக்காக்கவும் எழுத்து, பாடல், வாத்தியம், நாட்டியம், அறிவிப்பு,நெறியாள்கை,சினிமா, கிராமியக்கலைகள்மற்றும்ஏனையநுண்கலைகள்முதலான பல்துறைக்கலைஞர்கள்மதிப்புறுத்தப்படவுள்ளனர்.

இலங்கையில்கலைஇலக்கியத்துறைகளுக்கு அளப்பரும் பங்காற்றுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம்கலைஞர்களைஉள்ளடக்கிஅறுபது வயதுக்குமேற்பட்டகலைஞர்களுக்குக்கலாபூசணவிருது முதலான அரச விருதுகள் வருடந்தோறும் வழங்கப்பட்டும் வருகின்றன.

ஆனாலும்இலங்கைத்தீவில்தமிழர்தம்பாரம்பரிய மற்றும் நவீன கலைகளைப் பேணிப் பாதுகாத்து ஊக்குவித்து அரச மதிப்பு நல்கும் செயற்பாடு முனைப்புடன் இதுவரை இடம்பெறவில்லைஎன்பதுபெருங்குறைபாடும்மறக்க முடியாத உண்மையும் ஆகும்.

இந்த நிலையில் தேசிய ஒருமைப்பாடு, அரச கருமமொழிகள், சமூகமேம்பாடுமற்றும்இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசனின் வழிகாட்டலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களத்தால் 'தமிழர்பாரம்பரிய மற்றும்நவீனகலைகள்' கலைஞர்களுக்கான அரசவிருதுவிழா 2019 எனும்பெயரில்எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் வெகு சிறப்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த விருதுக்கான விண்ணப்படிவங்களை தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களப்பிராந்திய அலுவலகங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்வதோடு www.hindudept.gov.lk என்றதிணைக்கள இணையத் தளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு 'தமிழர் பாரம்பரியமற்றும்கலைகள்-கலைஞர்களுக்கானஅரசவிருதுவழங்கும்விழா-2019' எனக் கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் 248-1/1, காலிவீதி, கொழும்பு- 04' எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் என இந்துசமயகலாசாரஅலுவல்கள்திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஜ)

# உள்ளூராட்சி சபைகள் அறவிடும் வரி மக்கள் நலனுக்கே பயன்படுத்தப்படும்

## திறைசேரிக்கு அனுப்பப்படாது என்று கரைச்சி தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவிப்பு

*கிளிநொச்சி, ஜூன் 15*

*பிரதேச சபைகளால் அறவிடப்பட்டும் வரி திறைசேரிக்குச் செல்லாது. அவை இங்கேயே மக்களின் நலன்களுக்கே செலவிடப்படும். இத்தகைய வரி வருமானத்தின் ஊடாக பிரதேச சபையின் எல்லையில் உள்ள பல பகுதிகளையும் முன்னேற்றமுடியும்.*



இவ்வாறு கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்டபகுதியில்உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் அரச,அரசசார்பற்றநிறுவனங்களிடமிருந்து ஆவண வரியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை கரைச்சி பிரதேச சபையினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் இது நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இங்குள்ள மக்கள் பல்வேறு கனவுகளுடன் வாழ்கின்றனர். எமது பிரதேசம் இவ்வாறு இருக்க வேண்டும் என்று பல்வேறு ஆசைகள் உள்ளன. அதற்கான நிதியைப்பெற்றுக்கொள்வதற்கே இவ்வாறான வரிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. 23 கிராம அலுவலர் பிரிவில் 7 வட்டாரத்தில் 20ஆயிரத்து 632 ஆதனங்களிலிருந்து வரி அறவீடு செய்யப்படவுள்ளது. இதனூடாக ஒரு வருடத்தில்44மில்லியன்ரூபாவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றுதெரிவித்தார். சமாதான காலத்தில்விடுதலைப்புலிகள் வரி அறவிடப்பட்ட விடயம் தொடர்பிலும் அவர் தனது உரையில்குறிப்பிட்டிருந்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரானத.குருகுலராஜாகருத்துத் தெரிவிக்கையில்,

எமதுமக்கள்அரசசட்டதிட்டங்களுக்கு இணங்க பழகிக் கொண்டவர்கள். குறிப்பாக யாழ்.தேவிதொடருந்துஇலங்கையில்அதிகவருமானத்தை ஈட்டுபட்டுவதாக அரச புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. இதற்குக்காரணம்எமதுமக்கள் தொடருந்தில் பணம் செலுத்திப் பயணிக்கின்றனர் என்பதே. வரி வருமானங்களை மக்கள் அந்தந்தக் காலப்பகுதிகளில் செலுத்தினால் பிரதேச சபை யாரிடமும் கை யேந்த வேண்டியதில்லை - என்றார்.

வடக்கு மாகாண சபை முன்னாள்உறுப்பினர்வை.தவநாதன்கருத்துத்தெரிவிக்கையில், கரைச்சிப் பிரதேச சபை இவ்வாறான வரித் திட்டங்களை அறிமுகப்படுத்தும்போது, அவை மக்களுக்கு உரிய முறையில்செலவுசெய்யப்படுகின்றனவா என்பதை அவதானிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சில பகுதிகளில் கழிவகற்றல்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை. இவ்வாறு மக்களிடமிருந்து பெறப்படும் வரிகளின் ஊடாக மக்களுக்குப் பிரதேச சபையால் அர்ப்பணிப்புடனான சேவைகள்முன்னெடுக்கப்படவேண்டும் - என்றார். (த-6)



# பொலிஸ் அத்தியட்சகர் ஆளுநரைச் சந்தித்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாண மாவட்ட புதிய பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் சந்தித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் வடக்கு மாகாணத்திலும் சட்டவிரோதமாகசெயற்பட்டுவரும்சமூகவிரோதக்குழுக்களை கட்டுப்படுத்துவதற்குரியநடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு ஆளுநர் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேட்டுக்கொண்டார். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். (த-7)

10 வருடங்களாக இழுபறிப்பட்ட

# நெடுந்தீவுப.நோ.கூ.ச கணக்காய்வு நிறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 15

கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்படாமல் இருந்த நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் யாவும் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெரும் முயற்சியால் ஆறுமாதங்களில் நடத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளன. கணக்காய்வில் மிகத் தேர்ச்சி பெற்ற மூத்த கூட்டுறவு அபிவிருத்திஅலுவலர்களைக்கொண்டு இந்தக் கணக்கறிக்கைகள் யாவும் விரைவாக மேற்கொள்ளப்பட்டுமுடிவுறுத்தப்பட்டுள்ளன என்று கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து எஸ்.செல்வக்குமரன், கே.வாகீசன், மன்னார் மாவட்டத்தில்இருந்துகே.கமலநாதன், வவுனியாவிலிருந்து வே.பிரதிஸ் குமரன் ஆகிய கணக்காய்வில் தேர்ச்சி பெற்ற மூத்த கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் இந்தக் கணக்காய்வை மேற்கொண்டனர்.

பல வருடங்களாகப் போதிய நுகர்ச்சி வியாபாரம் இன்றியும் போதிய செயற்பாடுகள் இன்றியும் இந்தச் சங்கம் நட்டத்தில் செயற்பட்டும்வந்தது. சங்கத்தின் வருடாந்தக் கணக்காய்வு நடவடிக்கைகள் யாவும் கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்படாது கிடப்பில் இருந்தன.

வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையாக இந்தக் கணக்காய்வுநடவடிக்கைமூத்த கூட்டுறவுஅபிவிருத்திஅலுவலர்களைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்தக்கணக்காய்வுஇறுதிஅறிக்கையின் படி சங்கத்துக்கு பல லட்சம் ரூபா வருமதியாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும் இக்கட்டான நலிவுற்ற நிலையிலும் போதிய செயற்பாடுகள் இன்றி இந்தச் சங்கம் செயற்பட்டும் வருகின்றது.

தற்போது இந்தச் சங்கத்தின் செயற்பாடுகள் யாவற்றையும் படிப்படியாகமுன்னிலைப்படுத்தியும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நுகர்ச்சிவியாபாரத்தைஅறிவிக்கும் முகமாக பூட்டப்பட்ட கிளை நிலையங்களைமீளவும்திறந்து வைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேசமயம் இந்தச் சங்கத்தின் செயற்பாடுகளை அதிகரிக்கவும் அதற்கானகாலநிலையைஆராயும்முகமாகவும்வடக்குக்கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள் குழு விரைவில் நெடுந்தீவுக்குச் செல்லவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

# கசூரினாக் கடற்கரையில் சுற்றுலாவிகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

சிறுவர்களைக் கவரும் விளையாட்டுக்கள், ஆண்-பெண்தனித்துவமானகுளியலறைவசதிகள், இளைப்பாறு மண்டபங்கள், நவீன வடிவிலான இளைப்பாற்றுகுடில்கள்மற்றும்உணவகங்கள்உள்ளிட்டபெரும்வசதிகளுடன் இயங்கும் கசூரினா கடற்கரையை நோக்கி சுற்றுலாப்பயணிகள் மீண்டும் படையெடுத்த வண்ணம் உள்ளதைக்காணக் கூடியதாக உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலைத்தொடர்ந்துகுறைவடைந்திருந்த சுற்றுலா பயணிகள் தற்போது 'இதமான' காலநிலையைத் தொடர்ந்து மீண்டும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் காரைநகர் கடற்கரையைநோக்கிப்படையெடுத்து வருகின்றனர்.

இதேவேளை காரைநகர் கசூரினா கடற்கரையை மேலும் நவீனப்படுத்தும் நோக்கில் தவிசாளர் வீ.கேதீஸ்வரன், செயலர் ச.பாலரூபன் ஆகியோர் இணைந்த வகையில் நவீன திட்டங்கள்உட்புகுத்தப்பட்டுஉள்ளூராட்சி மற்றும் சுற்றுலா வடக்குமாகாண அமைச்சுக்கு திட்டங்கள் நகர்த்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சுற்றுலாப்பயணிகளின் வருகையை தொடர்ந்து கசூரினாகடற்கரையோரம்முழுவதும்மூன்றுநாள்வேலைத்திட்டத்தின் கீழ் சுத்தப்படுத்தும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடற்கரைமுழுவதும்அழகுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வாகனங்களுக்கான பிரத்தியோகமான இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. (எ-50)

# வன்னியில் ஒரு தொகையினர் பெயர்களை மாற்றுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வன்னியில் அழகான தமிழ்ப் பெயர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட தமிழ்ப் பெயர்களை அதிகமானோர் அண்மைக்காலமாக மீண்டும் தமது பழைய பெயர்களுக்கே மாற்றம் செய்கின்றனர் என்று மாவட்டச் செயலகங்களின் பதிவாளர் அலுவலகங்கள் தெரிவிக்கின்றன.

2006ஆம் ஆண்டுக்கு முன்னர் வன்னிப் பகுதியில் பல சிறுவர்களின் பெயர்கள் தமிழ் பெயராகக் காணப்படவில்லை என்பதனால் சிறுவர்களின் பெயரை தமிழ்ப் பெயராக பெற்றோர் விருப்பத்தில் மாற்றம் செய்யப்பட்டது.

இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டபலர் இரு பெயர் தடுமாற்றம், சிலர் அந்தப் பெயர்களைத் தற்போது விரும்பாமை, சிலர் எண்சோதிடம் எனக் காரணம் கூறி மாற்றுகின்றனர்.

இதன் அடிப்படையில் பலரும் பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை மூன்றாவது முறையாகவும் மாற்றம் செய்கின்றனர். இது தொடர்பில் மாகாண பதிவாளர் நாயக அலுவலகத்தில் விவரம் கோரியபோது பெயர் மாற்றம் செய்வதை உறுதிப்படுத்தினர்.

பெயரை எத்தனை தடவை வேண்டுமானாலும் சட்டப்படி மாற்றலாம் என்றும் தெரிவித்தனர். (த-105)



# பொதுமக்களின் எதிர்ப்பால் கோபுரம் அமைப்பதில் இழுபறி

வவுனியா இறம்பைக்குளம் மயானத்துக்கு அருகில் தனியார் தொலைத் தொடர்பு நிறுவனம் நேற்றுமுன்தினம் தொலைத் தொடர்புக்கோபுரம் அமைக்க முற்பட்டபோது அங்குள்ள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அதை அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டன.

குடியிருப்புக்கள், பாடசாலை, ஆலயம், மயானத்துக்கு அருகில் அதை அமைக்க வேண்டாம் என்று கட்டட ஒப்பந்தப் பணியாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். பின்னர் நகரசபையின் கவனத்துக்கு விடயம் கொண்டு செல்லப்பட்டு தொலைத் தொடர்புக்கோபுரம் அமைக்கும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டது.

கோபுரம் அமைக்க வவுனியா நகர சபைக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அனுமதி வழங்கப்படவில்லை. 19அடி உயரமும், 15அடி அகலத்திலும் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் நிறுத்தப்பட்டுள்ளன. (த)

# வீதிகளுக்கு பெயர் பலகைகள் நடல்

வலி.தென்மேற்கு, ஜூன் 15

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள வீதிகளுக்கு பெயர்ப்பலகைகள் நடும் செயற்பாட்டில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சுமார் 600 வீதிகள் வரை இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

துரித கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத் தின் கீழ் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கி வரும் நிதியில் 90 வீதம் வீதிகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஐம்பது வருடங்களுக்கு மேல் அபிவிருத்தி செய்யப்படாமல் கிடந்த வீதிகள் தற்பொழுது பல மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு புதுப்பொலி வுடன் காணப்படுகின்றன.

இதனால் வீதிகளுக்குப் பெயர்ப் பலகைகள் சூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் மனோகணேசனால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து ஏற்கனவே 28 கிராம ஆலுவலகர் பிரிவுகளில் 100 வீதிகளுக்குப் பெயர்ப் பலகைகள் நடப்பட்டன.

தற்பொழுது மேலும் 120 வீதிகளுக்குப் பெயர்ப் பலகைகள் நடுவதற்கான நடவடிக்கையை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. (ஐ-115)

# நீராவியடிப் பிள்ளையார் கோவிலில் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டன

முல்லைத்தீவு, ஜூன 15

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இருந்த நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பெயர்ப் பலகை ஒன்றையும் குருகந்த றாஜமகாவிகாரையின் பெயர் பலகையையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நேற்று அகற்றினர்.

அவை அனுமதியற்ற நிலையில் நடப்பட்டிருந்தன என்று அதிகார சபையினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மதரீதியில் பிரச்சினை ஏற்படுத்தி நீதி மன்றில் வழக்கு தொடர்ந்தவண்ணமுள்ள நீராவியடிப்பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள வளாகத்தில் பௌத்த விகாரை அமைத்து குருகந்த ராஜமகா விகாரை என்று பெயர் சூட்டப்பட்டு வழிபாடுகள் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமையினால் இரு மதங்களுக்கிடையில் வழிபாடு மற்றும் இடம் தொடர்பிலான பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றில் தொடர்கின்றது. இரண்டு தரப்பினரும் அமைதிக்குப் பங்கம் இன்றி வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட நீதிமன்று கட்டளையிட்டிருந்த நிலையில் பௌத்த பிக்குகளும் பெரும்பான்மை மக்களும் ஒன்றிணைந்து கடந்த 5ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 11ஆம் திகதி அமைச்சர் மனோ கணேசன் அங்கு சென்று பார்வையிட்டு கலந்துரையாடியிருந்தார்.

வீதியிலிருந்து 15 மீற்றர் தூரத்துக்குள் இரண்டு பதாகைகளும் காணப்பட்டன என்று அவை அகற்றப்பட் டன. நீதிமன்ற அதிகாரிகள், பொலிஸார், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் முன்னிலையில் அவை அகற்றப்பட்டன. (த-ரி3)

கிளிநொச்சி

# வலயக் கல்விப் பணிப்பாளர் பாங்கொக் பயணமாகிறார்

கிளிநொச்சி, ஜூன் 15



கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ் தாய்லாந்தின் பாங்கொக்கில் அமைந்துள்ள யுனஸ்கோவின் தலைமை காரியாலத்தில் இடம் பெறவுள்ள செயலமர்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காகப் பயணமாகிறார்.

நாளைமறுதினம் 17ஆம் திகதி மற்றும் 18ஆம் திகதிகளில் "ஒருவர் பின்னால் மற்றொருவர்" எனும் தலைப்பில் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளில் கல்வி நிலைமை தொடர்பான செயலமர்வு இடம்பெறவுள் ளது.

இந்த செயலமர்வில் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பாங்கொக் செல்கின்றார். (ஐ-214,105)



# புதுக்குடியிருப்பு முதலாம் வட்டார வீதி சீரமைப்பு

மன்னார், ஜூன் 15

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டார வீதி சீரமைக்கப்பட்டு வருகிறது. வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில் இது சீர மைக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குச் சொந்தமான பல வீதிகள் வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் நிதிப்பங்கீட்டில் சீரமைப்புச் செய்யப்பட்டு வருகிறன.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குப் போதிய வருமானம் இல்லாமையால் பல உள்ளக வீதிகள் திருத்தப்படாமல் இருந்தன. இது சம்பந்தமாக மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அதிகப்படியான முறைப்பாடுகளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ மோகனின் நிதி ஒதுக்கீட்டில் புதுக்குடியிருப்பில் உள்ள பல உள்ளக வீதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. (த-213)

வாகன விபத்தில்

# இரு மாணவர்கள் மருத்துவமனையில்

முல்லைத்தீவு, ஜூன் 15

கன்டர் ரக வாகனம் மோதி காயமடைந்த நிலையில் இரு மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து முள்ளியவளை செங்குந்த வீதி சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் முள்ளியவளையைச் சேர்ந்த இரு மாணவர்கள் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

முல்லைத்தீவு முள்ளியவளைப்பகுதியில் செங்குந்த வீதிச் சந்தியில் பேருந்து தரிப்பிடத்துக்கு அருகாமையில் நின்ற மாணவர்கள் இருவரை வீதியால் சென்ற கன்டர் ரக வானம் ஒன்று மோதியதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ரி3)





# வியாபார நிலையம் திறப்பு

முல்லைத்தீவு, ஜூன் 15

மாங்குளம் உயிரிழை அமைப்பால் வழங்கப்பட்ட தொழிற் பயிற்சியின் போது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கான வியாபார நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

மாங்குளம் ஏ9 வீதியில் உள்ள அமைப்பின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 9.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் உயிரிழை அமைப்பின் போசகரும் மனநல மருத்துவ நிபுணருமான சிவதாஸ், வரோட் ,வலுவூட்டல் மையத்தின் நிறைவேற்று இயக்குனர் அருட்தந்தை ரொனால்ட் சுஜீவன் மற்றும் எல்.ஆர்.வி அறக்கட்டளை இனைப்பாளர் பிரேம்குமார் மற்றும் உயிரிழை அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், பயனாளிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



# வவுனியாவில் கவனவீர்ப்பு

வவுனியா, ஜூன் 15
வவுனியா மருத்துவமனையில் மருத்துவர்கள் நேற்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.
சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.
சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நாட்டின் சுகாதார சேவைக்கு பாதகமான முறையில் நடந்துகொள்கிறார். அரச மருத்துவ அதிகாரிகள் மட்டத்தில் அதிகமான பிணக்குகளை ஏற்படுத்தியுள்ளார் என்று கவனவீர்ப்பில் ஈடுபட்டோர் குற்றஞ்சாட்டினர். அமைச்சர் ராஜிதவின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என்றும் கோரினர்.
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மகிந்த ராஜபக்சவுக்கு பேராதரவு வழங்கும் அமைப்புக்களில் ஒன்று என்று பலராலும் குற்றஞ்சாட்டப்படும் நிலையிலேயே அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஆங்காங்கே கவனவீர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். (த)

# மக்களால் தெரிவான பிரதிநிதிகள் எமக்கு எதிராகச் செயற்படுகின்றனர்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வடக்கு - கிழக்குச் சங்கம் குற்றச்சாட்டு


*கிளிநொச்சி, ஜூன் 15*
*மக்கள் பிரதிநிதிகள் தமக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்று வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலர் லீலாவதி ஆனந்தநடராசா தெரிவித்துள்ளார்.*

கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் சங்கத்தின் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு -கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் இன்று பல அரச சலுகைகள் வழங்கப்படுகிறன, அரசுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவும் எமது அரசியல் தலைமைகள் தற்போது தேர்தல் நெருங்குகின்றபோது கிணறு கட்டித் தருகின்றோம் எனவும், பல்வேறு உதவிகளைச் செய்கின்றோம் என்றும் தெரிவித்து வருகின்றனர். நாங்கள் இரண்டு வருடங்களாகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தால் வழங்கப்படும் உதவிகளைகூடப் பெற்றுக்கொள்ள விரும்பாத பலர் உள்ளனர். அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றும் வகையிலும் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் வகையிலும் இவ்வாறு செயற்படுகின்றனர்.
பல்வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில், கிராம எழுச்சி மற்றும் சமுர்த்தி போன்றவற்றை வழங்குவதில் எமது அரசியல்வாதிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இது கவலை அளிக்கிறது.
பல்வேறு சந்தர்ப்பங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது வங்கிக்கணக்குகளைநிரப்பிக்கொள்கின்றனர்.
முஸ்லிம்தலைவர்கள் வெவ்வேறு அரசியல் கட்சிகளாக இருக்கின்றனரெனினும், அவர்களது சமூகத்துக்கு ஒரு பிரச்சினை ஏற்படுகின்றபோது ஒற்றுமையாகத் தீர்மானம் எடுக்கின்றனர். அது எமது அரசியல் தலைமைகளிடம் இல்லை. எமது அரசியல் தலைமைகள் தமிழ் மக்களை விற்பதிலேதான் போட்டி போடுகின்றார்கள் - என்றார். (த-6)

மன்னார் பிரதேச சபை

# மலேரியா நுளம்பை அழிக்கும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு

மன்னார்,ஜூன் 15
ஆபத்தான மலேரியா நுளம்பை அழிக்கும் மன்னார் பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கத்தின் செயற்பாட்டுக்கு மன்னார் பிரதேச சபை ஒத்துழைப்பு வழங்குவதாக முடிவெடுக்கப்பட்டது.



நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மன்னார் பிரதேச சபைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.
ஆபத்தான மலேரியா கிருமி இந்தியாவில் உள்ளது அந்த கிருமியை பரப்பும் நுளம்புகள் இலங்கையில் மன்னாரில் மட்டுமே உள்ளதாக பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கம் அறிவித்துள்ளது.
இந்த நுளம்புகள் மன்னாரில் எருக்கலம் பிட்டி, தலைமன்னார், பேசாலைப் பகுதிகளில் உள்ளன.
இந்த நுளம்புகள் நன்னீர் மூலம் பரவுவதால் அதை பரப்பும் நுளம்புகள் முட்டையிடுவதை இல்லாமல் செய்ய வேண்டும்.
எனவே மன்னார் தீவை அண்மித்த பகுதிகளில் ஆழம் குறைந்த, மக்கள் பாவனையில் இல்லாத கிணறுகளை மூடும் நடவடிக்கையில் பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கம் ஈடுபட்டுள்ளது.
அதற்காக மன்னார் பிரதேச சபையின் ஜே.சி.பி. இயந்திரத்தை மாதத்தில் ஒருநாள் இலவசமாக தருமாறு மன்னார் பிரதேச சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் என்று மன்னார் பிரதேச சபை செயலரால் தெரிவிக்கப்பட்டது.
செயலரின் கருத்துகளுக்கு அமைய மலேரியா நோயிலிருந்து மன்னார் மாவட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் மாதத்தில் ஒரு முறை மலேரியா தடுப்பு இயக்கத்தின் பாவனைக்காக ஜே.சி.பி இயந்திரத்தை வழங்குவது என்று சபையில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஜ-213)

# மன்னாரில் சமுர்த்தி பெறுவோர் புத்தளத்திலும் பெறுகின்றனரா?

## செயலகத்தினர் ஆராய்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 15
மன்னார் மாவட்டத்தில் சமுர்த்தி உதவி பெறுவோர் புத்தளம் மாவட்டத்திலும் சமுர்த்தி உதவிகளைப் பெறுகின்றனரா என்பது பற்றி ஆராயப்படவுள்ளது. அதற்காக மன்னாரில் சமுர்த்தி பெறுவோரின் விவரங்கள் புத்தளம் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று மன்னார் மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர்.
மன்னார் மாவட்டத்தில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் பல புத்தளம் மாவட்டத்திலும் சமுர்த்தி உதவியைப் பெறுகின்றன என்று, மன்னாரில் சமுர்த்தி உரிமம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டி யிருந்தார்.
இது பற்றிக் கேட்டபோதே மாவட்டச் செயலகத்தினர் இவ்வாறு தெரிவித்தனர்.
பிற மாவட்டத்தில் உதவி பெறுவோர் குடும்பத்திலுள்ள ஏனைய அங்கத்தவர்களின் பெயர்களில் உதவி பெறுகின்றனர் என்றும் கூறப்படுவதனால் அனைவரினதும் தேசிய அடையாள அட்டை இலக்கத்துடனேயே விவரங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.
பிற மாவட்டத்தில் சமுர்த்தி பெறுவது கண்டறியப்பட்டால் தயவு தாட்சண்யமின்றி சமுர்த்திக் கொடுப்பனவு முழுமையாக நிறுத்தப்படும் என்று மேலும் தெரிவித்தனர்.
இதேபோன்ற குற்றச்சாட்டு முல்லைத்தீவு மாவட்டத்திலும்முன்வைக்கப்பட்டுள்ளதால், அங்குள்ள மாவட்டச் செயலகத்தினரும் வடக்கின் சகல மாவட்டங்களுக்கும் விவரங்களை அனுப்பி உறுதிப்படுத்தவுள்ளோம் என்று தெரிவித்திருந்தனர். (த-105)

# வீடில்லா மக்களை மஸ்தான் சந்தித்தார்

வவுனியா, ஜூன் 15
வவுனியா கணேசபுரம் கிராமத்தில் வீடுகள் கிடைக்காத வர்களுடன் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்துரையாடினார்.
அவர்களது கிராமத்துக்கு நேற்றுச் சென்றிருந்த அவர் அந்த மக்கள் தற்போது வசிக்கும் தற்போதைய வீடுகளைப் பார்வையிட்டார்.
அவர்களின் குடும்ப நிலைமைகளையும் அவதானித்தார். (த)

# போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான செயலமர்வு

வவுனியா,ஜூன் 15
போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான செயலமர்வு ஒன்று வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.
அரச தலைவரின் சிறப்புச் செயற்திட்டத்தின் கீழ் இடம்பெறும் போதை ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக குறித்த பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள், மற்றும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு இடம்பெற்றது. பாடசாலை அதிபர் உபைத் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் வெண்கல செட்டிகுளம் சிறுவர் நன்னடத்தை அலுவலகர் இளஞ்சிங்கம், உலுக்குளம் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ)

# பத்மநாபாவின் 29ஆவது தியாகிகள் நினைவு தினம்

ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் நிறுவகத் தலைவர் தோழர் பத்ம நாபாவின் 29 ஆண்டு தியாகிகள் தினம் எதிர்வரும் 19 ஆம் திகதி வடக்கு கிழக்கில் நினைவு கூரப்பட வுள்ளது என்று ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பொருளாளரும் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்தார். மாவட்ட பொறுப்பாளர்களின் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நினைவு கூரப்படவுள்ளது.
நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வவுனியாவில் கட்சியின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், கிளிநொச்சியில் கட்சியின் உப செயலரும், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான க.சர்வேஸ்வரன், மட்டக்களப்பில் கட்சியின் உப தலைவர் துரைரெட்ணம், மன்னாரில் கட்சியின் பொருளாளரான நானும் கலந்து கொள்ளவுள்ளோம்.
மாவட்டங்களின் சூழ்நிலைக்கு அமைவாக மாவட்ட அலுவலகங்களில் இடம் பெறும் தியாகிகள் தின நிகழ்வில் கட்சியின் தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த அழைப்பு விடுக்கின்றோம் - என்றார். (த-56)

# கரைச்சிப் பிரதேச சபையினரால்சோலை வரி அறவீடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச சபையின் வரலாற்றில் முதல் தடவையாக சோலைவரி அறவீடு நேற்றுத் தொடக்கம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.
கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட 21 வட்டாரங்களில் முதற்கட்டமாக 7 வட்டாரங்களில் குறித்த பணிகள் முழுமை செய்யப்பட்டு அறவீட்டுப் பணிகளுக்கான கணிப்பீடுகள், அதற்கான பெறுமதி கணக்கிடப்பட்டு தற்போது உரிமையாளர்களுக்குச் சிட்டை சமர்ப்பிக்கப்படுகின்றது. 7 வட்டார எல்லைகளுக்குள்ளும் 23 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன.
இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள 7 வட்டாரங்களிலிருந்தும் ஆண்டுக்கு 80 மில்லியன் ரூபா சோலை வரியாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கணக்கிடப்பட்டுள்ளதோடு இந்த ஆண்டின் இறுதி அரையாண்டுக்காக 40 மில்லியன் ரூபா அறவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பிரதாய நிகழ்வு சபைத்தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது. (த-105)




## ஆழ்துளைக் கிணறு அமைத்து வழங்கல்

கொடிகாமம், ஜீன் 15
கிழக்கு மாகாணத்தில் கதிரவெளி புச்சாங்கேணியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
உதவும் இதயங்கள் நிறுவனத்தின் ஊடாக ஜேர்மனியில் வசிக்கும் துசியன் வாகினி தம்பதியரின் 16 ஆவது திருமண நாளை முன்னிட்டு அவர்களால் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-159)

# மன்னார் சதொச மனிதப் புதைகுழி வழக்கில் தொல்லியல் திணைக்களத்தை உள்ளீர்ப்பதா?

## வரும் 27ஆம் திகதி நீதிமன்றில் கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 15
மன்னார் சதொச வளாக மனிதப் புதைகுழி வழக்கில், அகழ்வு ஆய்வுப் பணியில் தொல்லியல் திணைக்களத்தை உள்ளீர்ப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவுள்ளது. அதுபற்றிய கலந்துரையாடல் ஒன்று வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளது. வழக்கும் அன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

'சதொச' வளாகத்தில் கட்டடம் அமைக்கவென்று நிலம் தோண்டியபோது மனித எலும்பு எச்சங்கள் வெளிக்கிளம்பின. பணிகள் இடை நிறுத்தப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாக எலும்புக்கூட்டு அகழ்வு பணிகள் இடம் பெற்றன.
318க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அவை எந்தக் காலப் பகுதிக்கு உரியவை என்று கண்டறிவதற்காக மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவிலுள்ள புளோரிடா ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
ஆய்வு முடிவு அறிக்கையின் அடிப்படையில் குறித்த எலும்புகள் 500 வருடங்களுக்கு மேற்பட்டவை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
இந்த முடிவுகள் சம்மந்தமாக பலரும் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.
அந்த நிலையில் மன்னார் நீதிவான் மன்றில் கடந்த மார்ச் 22ஆம் திகதி இடம்பெற்ற உயர் மட்டக் கலந்துரையாடலில், புதைகுழி அகழ்வுப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதுடன் புதைகுழிப் பகுதியில் காணப்படும் மண் படைகள் மற்றும் ஏனைய சாதக பாதக தன்மைகள், தடையப் பொருள்கள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறும் களனிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ராஜ்சோமதேவவுக்கு மன்று பணித்திருந்தது.
இந்த நிலையில் மன்னார் நீதிமன்றில் மன்னார் பொலிஸார் நேற்றுமுன்தினம் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்ததற்கு அமைய மனித புதைகுழி வழக்கு மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது குறித்த புதைகுழி 500 வருடங்களுக்கு மேற்பட்டதாகக் காணப்படுவதாக அறிக்கை கிடைக்கப் பெற்றமையால் அகழ்வுப் பணிகள் தொடர்பாக இலங்கை தொல்லியல் திணைக்களத்தை உள்ளீர்ப்பது தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகம் சார்பான சட்டத்தரணி புராதனியும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பாக சட்டத்தரணி டினேசனும் முன்னிலையாகி இருந்தனர்.
இந்த நிலையில் தொல்லியல் திணைக்களத்தை உள்ளீர்ப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன் மன்னார் மனித புதைகுழி தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் சம்மந்தமாக தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இந்தமாதம் 27 திகதி கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
அன்றைய தினத்துக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கூட்டத்துக்கு தொல்லியல் திணைக்களமும் அழைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

## ஈருருளிகள் கையளிப்பு



வவுனியா, ஜீன் 15
வவுனியா, ஓமந்தை மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் நான்கு பேருக்கு ஈருருளிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.
ஜீவ ஊற்று அன்பின் கரம் அறக்கட்டளை ஊடாக நோர்வேயில் வசிக்கும் சுபாகரன் தாட்சாயினி தம்பதியினரின் புதல்வன் அகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவர்களால் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-222)



## கிளி. இராமகிருஷ்ண வித்திக்கு தற்காலிகக் குடிதண்ணீர் வசதி




கிளிநொச்சி, ஜீன் 15
கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலய மாணவர்களின் குடிதண்ணீர்த் தேவை தற்காலிகமாக நிறைவேற்றப்பட்டது.
பாடசாலையில் உள்ள கிணறு வற்றியதால் குடி தண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதில் மாணவர்கள் பெரும் இடர்களை எதிர் கொண்டனர்.
இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து தண்ணீர் தாங்கி மூலம் தண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகிறது. (ஐ-222)

## விளையாட்டுக் கழகம் சீரமைப்பு

கிளிநொச்சி, ஜீன் 15
பூநகரி, வாடியடி மத்திய நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனின் 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கழக சீரமைப்பு வேலைகள் நேற்றுமுன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன் பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் . அ. ஐயம்பிள்ளை, விளையாட்டுக் குழு இணைப்பாளர் ராஜ்குமார் மற்றும் கழக உறுப்பினர்கள் விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



## நவீன கற்றல் வசதிகளுடன் கூடிய வகுப்பறை திறப்பு


கிளிநொச்சி, ஜீன் 15
கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு நவீன கற்றல் முறைமை வசதிகளுடன் வகுப்பறை ஒன்று அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் தொகையைக் கொண்ட கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் கற்றல் வசதியை மேம்படுத்தும் நோக்குடன் குறித்த நவீன கற்றல் வகுப்பறை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.
நிகழ்வில் கல்வி அமைச்சால் 26 லட்சம் பெறுமதியான 40 ரப்கள் மற்றும், சிமாட் போட் ஆகியன கையளிக்கப்பட்டன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் மற்றும் கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் எஸ். ஜோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-35,222,6)





## முல்லை செல்வபுரத்தில் பற்றி எரிந்தது பனங்கூடல்!

முல்லைத்தீவு, ஜீன் 15
முல்லைத்தீவு. செல்வபுரம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு அருகில் உள்ள பனங்கூடலுக்குள் திடீரென பற்றிய தீ பனங்கூடல் முழுதும் பரவியுள்ளது. இதனால் மக்களின் பொருள்கள் சிலவும் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இந்த நிலையில் இந்த தீவிபத்து தொடர்பில் அருகில் உள்ள மக்கள் பொலிஸார் மற்றும் படையினருக்கு தெரியப்படுத்தினர்.
விரைந்து வந்த படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து கரைதுறைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் மாவட்ட செயலக ஊழியர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக தொடர்சியாக பனைமரக்கூடல்கள் அடிக்கடி தீபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ifi3)



# கோத்தபாய ராஜபக்சவுடைய மனு ஜூலைக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 15

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச தாக்கல் செய்துள்ள மீளாய்வு மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. அசல வெங்கப்புலி மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் மனு அழைக்கப்பட்டுள்ளது. மனுவை விசாரித்த நீதிபதிகள் வழக்கை எதிர்வரும் ஜூலை 26ம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவிட்டனர்.

அதேநேரம் சர்ச்சைக்குரிய எவன் கார்ட் சம்பவம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரிக்க விதிக்கப்பட்ட தடை உத்தரவும் அன்றுவரை நீடிக்க ப்பட்டுள்ளது.

நேற்று மீளாய்வு மனு அழைக்கப்பட்ட போது இரு தரப்பினரும் தங்களது எழுத்துமூல அறிக்கையை மன்றில் சமர்பித்தனர்.

எவன்கார்ட் மெரியட் நிறுவனத்துக்கு மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை நடத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கியதன் ஊடாக அரசுக்கு ஆயிரத்து 140 கோடி ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டது என்றுகூறிஇலஞ்சஊழல் ஆணைக் குழுவால் தான் உள்ளிட்ட 6 பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு நீதி வான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு இலஞ்ச ஊழல் சட்டத்துக்கு விரோதமானது. அதன் காரணமாக தான் உள்ளிட்ட 8 பிரதிவாதிகளை விடுவிக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நிராகரித்து தீர்ப்ப ளித்துள்ளார் என்றும், அந்த தீர்ப்பை செல்லுபடியற்றதாக்க கோரி மேல் நீதிமன்றத்தில் மறுஆய்வு கோத்தபாய ராஜபக்சவால் தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு மேல் நீதிம ன்றத்தில் விசாரணைக்கு வந்த மறுஆய்வு மனுவை விசாரிக்காமல் மேல் நீதிமன்ற நீதிபதி தள்ளுபடி செய்தார். கொழும்பு நீதிவான் நீதிமன்றின் தீர்ப்பு மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகிய இரண்டும் சட்டவிரோதமானது என்றும் தான் உள்ளிட்ட பிரதிவாதிகளை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மறு ஆய்வு மனு கோத்தபாய ராஜபக்சவால் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவே நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (எ)

## வடமேல் மாகாணத்தில் 10 லட்சம் மரக் கன்றுகள்

கொழும்பு, ஜூன் 15

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வடமேல் மாகாணத்தில் பத்து இலட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண ஆளுநர் பேஷல ஜயரத்னவால் ஆளுநர் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் அடுத்த ஆண்டுவரை தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண ஆளுநர் அலுவலகம் உள்ளூராட்சி மன்றங்களின் உதவியுடன் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. அரச அலுவலகங்கள் மற்றும் வீட்டுத்தோட்டங்களில் பயனுள்ள மரக்கன்றுகளை நடும் வகையில் உள்ளூராட்சி நிறுவனங்களினூடாக மரக்கன்றுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக நான்கு இலட்சம் மரக்கன்றுகள் வடமேல் மாகாணத்தின் குருநாகல், புத்தளம் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. (எ)

## தஜிகிஸ்தான் தலைவரை அரச தலைவர் சந்தித்தார்

கொழும்பு, ஜூன் 15

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தஜிகிஸ்தான் நாட்டின் அரச தலைவரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிஷ்சேக்கில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு இடம்பெற்றுவருகின்றது. இதில் பங்கேற்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட குழுவினர் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தஜிகிஸ்தான் அரச தலைவர் எமோமலி ரஹ்மான் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று துஷான்பே அரச தலைவர் மாளிகையில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் குறித்து பேசப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஸஹ்ரானின் சகாக்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 15

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியும் தடை செய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவருமான பயங்கரவாதி ஸஹ்ரானுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்புப் படையினரும், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் இருவரும் கண்டியிலுள்ள ஹின்குள்ள பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

## கிழக்குப் பல்கலை மாணவர் மருத்துவமனையில் சேர்ப்பு!

*பகிடிவதை காரணம் என க்குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 15

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் 4 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது மூத்த மாணவர்கள் மேற்கொண்ட பகிடிவதையின் காரணமாகவே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. காயங்களுக்குள்ளான மாணவர்கள் ஏறாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்புப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல்கலைக் கழக நிர்வாகமும், பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 102 பேர் விசாரணையில்

கொழும்பு, ஜூன் 15

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் இதுவரையில் கைது செய்யப்பட்டவர்களில் 102 பேர் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்களில் 77 பேர் குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் 25 பேர் பயங்கரவாத தடுப்பு பிரிவிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## செவிப்புலனற்றோர் பாடசாலையில் மாணவர்களுக்கு அனுமதி

திருகோணமலை, ஜூன் 15

திருகோணமலை இலிங்க நகரில் அமைந்துள்ள செவிப்புலனற்றோர் பாடசாலையில் மாணவர்களுக்கான அனுமதிகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே, விடுதியில் தங்கி இருந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு உணவுடன் தங்குமிட வசதியும் இலவசமாக வழங்கப்படும் என்று பாடசாலை அதிபர் திருமதி. ஆர்.பாலசிங்கம் தெரிவித்தார்.

மேலதிக தொடர்புகளுக்கு 026.2220094, 026.2220957 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-40)

## 4 அபிவிருத்திகளுக்கு ரூ.75 லட்சம் ஒதுக்கீடு

*சரவணபவன் எம்.பி. வழங்கினார்*

வலி.தென்மேற்கு, ஜூன் 15

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் வடலியடைப்பு கிராமத்தின் அபிவிருத்திக்கு உதவ யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவ ணபவன் முன்வந்துள்ளார்.

பாடசாலை, ஆலயம் உட்பட 4 அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு அவர் 75இலட்சம் ரூபா வழங்கியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த.குமணனின் கோரிக்கைக்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலய விளையாட்டு மைதானம் சீரமைப்பதற்கு 10 லட்சம் ரூபாவும் வடலியடைப்பு கல்லூரி வீதி, வடலியடைப்பு அரசடி 2ஆம் வீதி, வடலியடைப்பு சைவப்பிரகாச வீதி ஆகியவற்றுக்குத் தலா 20லட்சம் ரூபா வீதமும் பரத்தனை ஐயனார் கோயில் அபிவிருத்திக்கு 5 லட்சம் ரூபாவும் வழங்கியுள்ளார். இந்த நிதி மூலம் அபிவிருத்தி வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-115)

## கர்ப்பிணிகளுக்குக் காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவரை நாடுக

*தேசிய டெங்கு தடுப்புப் பிரிவு அறிவுறுத்து*

கொழும்பு, ஜூன் 15

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு காய்ச்சல் நிலை ஏற்பட்டால் உடனடியாக அது தொடர்பான மருத்துவ ஆலோசனையை பெற்று கொள்வது மிக முக்கி யமானது என தேசிய டெங்கு தடுப்பு பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

தென் மேற்கு பருவப்பெயர்ச்சி மழைக்கால நிலையை அடுத்து ஏழு மாவட்டங்களில் டெங்கு நுளம்பு அதிகரிக்கும் இடர் முகாமைத்துவ மாவட்டங்களாக தேசிய டெங்கு தடுப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பாகவே தேசிய டெங்கு தடுப்பு பிரிவு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டால் உரிய வைத்தியரிடம் சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். விளையாட்டுநடவடிக்கைகளில் ஈடுபடுதல், உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேவையான அளவு நீரை அருந்த வேண்டும் - என்றார். (எ)

## கிராம எழுச்சி, சமுர்த்தி என்பன இழந்த செல்வாக்கை மீளப்பெறவே

*கூட்டமைப்பைச் சாடுகிறார் டக்ளஸ் எம்.பி.*

யாழ்ப்பாணம், ஜூன் 15

மக்களிடம் இழந்துள்ள தமது செல்வாக்கை மீண்டும் தூக்கி நிறுத்தும் வகையிலேயே கிராம எழுச்சி மற்றும் சமுர்த்தி போன்ற திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுத்தி வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் மாவட்ட, பிரதேச நிர்வாக செயலர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் டக்ளஸ் இவ்வாறு கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ளன எனினும், நெருக்கடியான அவல வாழ்வையே வாழ்ந்து வருகின்றார்கள். மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பல்வேறு வகையான செயற்றிட்டங்களை வகுத்து அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுத்தோம். எமது இணக்க அரசியலை எள்ளி நகையாடிய சக தமிழ்க் கட்சிகள் குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மக்கள் மத்தியில் தற்போது அம்பலப்பட்டு நிற்கின்றார்கள். இந்த நிலையில்தான் மக்கள் மத்தியில் இழந்த தமது செல்வாக்கை மீண்டும் தூக்கி நிறுத்தும் வகையில் கிராம எழுச்சி மற்றும் சமுர்த்தி போன்ற செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். இவையெல்லாம், அடுத்த தேர்தலுக்காக தம்மை தயார்ப்படுத்திக் கொள்ளும் கூட்டமைப்பினரின் வியூகமாகவே அவதானிக்க முடிகின்றது என்று கூறினார் - என்றுள்ளது. (த)

# புதிய அரசு உருவாக்கப்படுவதே நாட்டு மக்களின் விருப்பமாகும்

## டிலான் பெரேரா கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 15

நாட்டு மக்கள் தற்போது புதிய அரசொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே உள்ளனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மக்கள் அபிப்பிராயத்தைக் கோரி நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.



இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
அமைச்சரவையை மீண்டும் கூட்டுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். தொடர்ச்சியாக அமைச்சரவை கூட்டப்படாமல் இருந்திருந்தால் அரசமைப்பின் அடிப்படையில் புதிதாக ஒரு தலைமை அமைச்சரை நியமிக்க வேண்டி ஏற்பட்டிருக்கும்.
அரசமைப்பின் 46 (2) ஆம் அத்தியாயத்தின் படி தொடர்ந்து அமைச்சரவை கூட்டாவிட்டால் அதே சந்தர்ப்பத்தில் தலைமை அமைச்சருக்கான அதிகாரங்கள் இல்லாமல் போகும். இதன் போது புதிய தலைமை அமைச்சர் ஒருவர் அரசமைப்பின் பிரகாரம் கட்டாயம் நியமிக்கப்பட வேண்டும்.
அவ்வாறு புதிதாக ஒரு தலைமை அமைச்சரை நியமிப்பது சாத்தியமற்றது. காரணம் தற்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் நாடாளுமன்றத்தில் 113 பெரும்பான்மை கிடையாது. இவ்வாறிருக்கையில் புதிதாக ஒருவரைத் தெரிவு செய்வது கடுமையானது.
இதனால் நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்படும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு தற்போது முழுமையாக சீர்குலைந்துள்ளதால் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மக்கள் அபிப்ராயத்தை நேரடியாகக் கோர முடியும். ஆனால் தேர்தலுக்குச் செல்வதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத இந்த சந்தர்ப்பத்தில் பொதுசன அபிப்பிராயமே சிறந்த வழியாகும். -என்றார். (எ)

# 'பற்றிக்கலோ கம்பஸ்' தொடர்பில் மன்றுக்கு விரைவில் அறிக்கை

கொழும்பு, ஜூன் 15
மட்டக்களப்பில் அமைக்கப்படும் 'பற்றிக்கலோ கம்பஸ்' நிறுவனம் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி தொடர்பிலான மேற்பார்வைக் குழு தெரிவித்துள்ளது.
இந்த நிறுவனம் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையூடாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்று குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.
'பற்றிக்கலோ கம்பஸ்' தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா, அவரின் புதல்வர் மற்றும் 'பற்றிக்கலோ கம்பஸ்' நிறுவனத்தின் பதிவாளர் ஆகியோர் குறித்த குழுவுக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டிருந்தனர்.
'பற்றிக்கலோ கம்பஸ்' நிறுவனத்துக்கு எவ்வாறு நிதி கிடைத்தது என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக பேராசிரியர் ஆஷு மாரசிங்க குறிப்பிட்டுள்ளார். (எ)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அரச அதிகாரிகள் மீது வழக்கு

## மைத்திரி தீர்மானம் என மகிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15
உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்தில் பணிகளைச் சரியாக முன்னெடுக்காத அரச அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் வழக்குத் தொடர்வதற்கு அர தலைவர் தீர்மானித்து ள்ளார்.
இந்த தாக்குதல் குறித்து விசாரணை நடாத்துவதற்கு நியமித்திருந்த மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை அரச தலைவரால் சட்ட மா அதிபரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அரச தலைவரால் நியமிக்கப்பட்ட குழுவால் குற்றவாளிகள் என குறிப்பிடப்படும் அரச அதிகாரிகள் எந்த வழியிலும் தப்பிக்க முடியாது.
தாக்குதல் சம்பவம் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்தமை அவர்களின் கூற்றுக்கள் மூலம் தெளிவாகின்றது. பாதுகாப்புச் செயலர், புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் தங்களது கடமைகளை உரிய முறையில் செய்யவில்லை என்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் அம்பலமாகியுள்ளது. என்றார். (எ)

# மத்தியிலிருந்துவரும் அருவியாறு நானாட்டானில் உப்பாகிவிட்டது

## சாள்ஸ் எம்.பி. செயலருக்குத் தெரிவிப்பு



மன்னார், ஜூன் 15
நானாட்டான் அருவியாற்று நீர் உப்பாக மாறுவதில்லை என்ற கருத்துப்பட நானாட்டான் பிரதேசசெயலர் கூறியிருந்தார். அருவியாறுப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அருவியாற்று நீர் உப்பாகவே உள்ளது என்று பரிசோதித்து உறுதிப்படுத்தியுள்ளார். அதிகரித்த மணல் அகழ்வால்தான் இந்த அவலம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.
நானாட்டான் பிரதேச செயலகத்தால் வழங்கப்படுகின்ற ஒரு நாள் மணல் அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி முறைகேடாக அச்சங்குளம், மடுக்கரை, இராசமடு, ஆத்திமோட்டை பகுதிகளில் இரவு பகலாக மணல் அகழ்வு இடம் பெறுகின்றது. இதனால் கடற்கரையிலிருந்து 12 கிலோமீற்றரை அண்மித்த' பகுதியில் மணல் அகழ்வு காரணமாக உப்பு நீர் ஊற்றெடுத்து அருவியாற்றுடன் கலந்து நன்னீரான அருவியாற்று நீரை உப்பு நீராக்கிவிட்டது. இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தவுள்ளது.
இதனால் மேட்டுநிலப்பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் பொது மக்களுக்குக் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்படுகிறது என்று நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் மன்னார் மாவட்டச் செயலருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.
இந்த கடிதம் சம்பந்தமான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம் திகதி நடைபெற்றபோது நானாட்டான் பிரதேச செயலரிடம் மாவட்டச் செயலர் விளக்கம் கேட்டார். அதன் போது அருவியாறு உப்பாக மாறுவதில்லை என்ற கருத்துப்பட நானாட்டான் பிரதேச செயலர் கூறியி ருந்தார். அருவியாறு மத்தியிலிருந்து அநுராதபுரம் ஊடாக மன்னார் கடலைச் சென்றடைகின்றது.
சாள்ஸ் மற்றும் நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் பரஞ்சோதி மற்றும் சபை உறுப்பினர் ஜொனி ஆகியோர் கொடியிறகு பாலத்துக்குச் சென்றிருந்தனர். ஆற்று நீரை சாள்ஸ் பரிசோதித்த போது அது உப்பாக இருந்தது நூறு வீதம் உறுதிப்படுத்தப்பட்டது. அதை அந்த இடத்திலிருந்தவாறே சாள்ஸ் மன்னார் மாவட்டச் செயலருக்குத் தெரிவித்தார்என்றும்பரஞ்சோதி தெரிவித்தார். (து-213)

# மாலைதீவு குழுவினர் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, ஜூன் 15
மூன்று நாள் உத்தியோகப் பூர்வ பயணம் மேற்கொண்டு மாலைத்தீவின் முன்னாள் அரச தலைவரும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் குழுவினர் நேற்று இலங்கை வந்தனர்.
தலைமை அமைச்சரின் அழைப்புக்கு அமைவாக வந்துள்ளனர்.
இலங்கையில் கருத்துத் தெரிவித்த மாலைதீவு முன்னாள் அரச தலைவர், இலங்கையில் இருந்து குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு மாலை தீவுக்குக் கிடைத்துள்ளது. இலங்கைக்கான பயணங்களை மேற்கொள்ளுங்கள் என்று பன்னாட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்- என்றார். (எ)

# நாட்டுக்கும், ஐ.தே.கவுக்கும் புதிய தலைவர்கள் தேவை

## அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவிப்பு

நாட்டுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் புதிய தலைமைத்துவம்ஒன்றுதேவைப்படுகின்றது என்று டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.
களுத்துறையில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் அரசமைப்புக்கு மதிப்பளிக்கின்ற, கொலைகள் செய்யாத, ஊழல் அற்ற இளம் தலைமுறையின் படித்த தலைவர் ஒருவர் நாட்டின் அரச தலைவராக வர வேண்டும்.
இதுவரை நாட்டில் இருப்பது நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையே. 19 ஆவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்றதிகாரம் நீக்கப்படவில்லை.
அரசுக்கு, அரச தலைவர் பதவிக்கு மாத்திரமன்றி எனது கட்சிக்கும் தற்போது புதிய தலைவர் ஒருவர் வேண்டும். - என்றார். (எ)

# மத்திய வங்கி முறிகள் மோசடி: குற்றப் பத்திரத்துக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 15
மத்திய வங்கி முறிகள் மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக மேல் மாகாண நிரந்தர சிறப்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்ய தலைமை நீதியரசர் அனுமதி வழங்கியுள்ளார் .
சட்ட மா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் ஜோசப் அலோசியஸ் உள்ளிட்ட 10 பிரதிவாதிகளுக்கு எதிராக, மேல் மாகாண நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்து வழக்குத் தொடர்வதற்கு, பிரதம நீதியரசரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்று சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த வழக்கின் தன்மை, சர்ச்சை மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பெரும் அச்சுறுத்தல் என்பவற்றை கவனத்தில் கொண்டு, வழக்குத் தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபரின் இணைப்பதிகாரி அரச மூத்த சட்டத்தரணி நிரோஷா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.
2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27 ஆம் திகதி இடம் பெற்ற முறிகள் ஏலத்தின் போது, 10 ஆயிரத்து 58 பில்லியன் ரூபா திறைசேரி முறிகளை மோசடியான முறையில்கையாண்டமை தொடர்பில் பொதுச் சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் 5/1 பிரிவின் கீழ் அனைத்து பிரதிவாதி களுக்கும் எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்தவேண்டும் இராணுவத்தினரோ பொலிஸாரோ அல்ல

## அடைக்கலநாதன் எம்.பி. கூறுகிறார்



நானாட்டான், ஜூன் 15

பாதுகாப்பை நாங்கள் தான் உறுதிப்படுத்த வேண்டும். பொலிஸாரோ இராணுவத்தினரோ பாடசாலை வாசலில் நிற்பது பாதுகாப்பை உறுதிப்படுத்தாது என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்பு விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

இந்த உலகம் முழுதும் தங்களுக்கு வர வேண்டும். தங்களுடைய நாடாக மாற வேண்டும் என்ற சிந்தனையிலே செயற்படுகின்ற ஒரு நிகழ்வை நாங்கள் அயல் நாடுகளிலே பார்த்திருக்கின்றோம். இப்பொழுது எங்களுடைய நாட்டிலே அது உருவெடுத்திருக்கிறது. ஏப்ரல் 21ஆம் திகதிய குண்டுத் தாக்குதலில் மிக அதிகளவாக தமிழர்கள் தான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மக்களுடைய பிணங்களை எண்ணிக் கணக்குப் பார்த்துச் சந்தோசப்படுவதுதான் இந்தத் தீவிரவாதத்தின் எண்ணம். ஆகவே எங்களுடைய பாதுகாப்பை நாங்கள் தான் பார்க்க வேண்டும். அந்த விடயத்திலே நாங்கள் எல்லோரும் கவனமாக இருக்க வேண்டும். போகும் வழிகளில் பிள்ளைகளை, எல்லோரையும் கவனமாக நாங்கள் தான் பார்க்க வேண்டும்.

இவ்வளவு பிரச்சினை களுக்கு மத்தியில் வாழ்கின்ற நாங்கள் இவ்வளவு இழப்புகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு இந்த வாழ்க்கையை நடத்துகிறோம் என்றால் எங்கள் கடவுள் ஏதோ ஒரு வகையில் எங்களை விட்டிருக்கிறார் என்று சொன்னால் நாங்கள் நல்லதை செய்ய வேண்டும் என்பதற்காகவே. சமூக ஒற்றுமை கட்டாயம் தேவை. எங்களுடைய மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். ஆனால் எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்கின்ற ஒரு கட்டாய நிலைக்கு நாங்கள் வந்திருக்கின்றோம்.

எங்களுடைய தேசத்திலே பல பிரச்சினைகளை எங்களுடைய தமிழ் சமூகம் சந்தித்திருக்கிறது. இவ்வாறானவைகளிலிருந்து மீண்டு நாங்கள் எங்களுடைய செயற்பாட்டைச் செய்ய வேண்டும் - என்றார். (த-213)



# சிங்கப்பூர் நிதியமைச்சருடன் தலைமை அமைச்சர் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 15

மூன்று நாள் பயணம் மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அந்த நாட்டின் நிதி அமைச்சர் கே. சண்முகனைச் சந்தித்துத் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர், சிங்கப்பூருக்கான இலங்கையின் நிரந்தரமற்ற தூதுவர் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

சந்திப்பில் என்ன விடயங்கள் பேசப்பட்டன என்பது தொடர்பாக எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. (எ)

# தேவையற்று மைத்திரியை இழுக்கின்றார் ஹிஸ்புல்லா

## துமிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 15

2015 ஆம் ஆண்டு தேர்தலின் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக ஸஹ்ரான் செயற்பட்டார் என்று முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளமை இடம்பெறும் விசாரணைகளுடன் தொடர்பற்றதாகவுள்ளது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் தேர்தல் மாத்திரமல்ல எந்த தேர்தலாக இருந்தாலும் மைத்திரியானாலும், மகிந்தவானாலும் வேறு யார் போட்டியிட்டாலும் அவர்களுக்காக செயற்படுவதற்கும், ஆதரவளிப்பதற்கும் ஆதரவாளர்கள் இருப்பார்கள். இது சாதாரணமான விடயம். அதனடிப்படையில் தான் 2015 ஆம் ஆண்டு தேர்தலில் ஹிஸ்புல்லா மகிந்தவுக்கும், ஸஹ்ரான் மைத்திரிக்கும் ஆதரவளித்துள்ளனர்.

இவ்வாறு இவர்கள் இருவரும் வெவ்வேறு தரப்பினருக்கு ஆதரவளித்தமையால் இவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட முறுகல் அவர்களுடைய தனிப்பட்ட விடயமாகும். தெரிவுக் குழுவில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளே முன்னெடுக்கப்படுகின்றன. இதை புரிந்து கொள்ளாததைப் போன்று ஹிஸ்புல்லாஹ் தொடர்பில்லாத ஒரு விடயத்தைக் கூறியுள்ளார்.

இது மாத்திரமல்ல அண்மையில் ' இலங்கையில் நாம் சிறுபாண்மையினர் என்றாலும் உலகளாவிய ரீதியில் பெரும்பான்மையினர் ' என்று கூறியிருந்தார். அண்மைக்காலமாக ஹிஸ்புல்லா இவ்வாறு முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்து வீண் சர்ச்சைகளை ஏற்படுத்துகின்றார். இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளை இவர் நிறுத்திக் கொள்ள வேண்டும்- என்றார். (எ)

# 11 இளைஞர்கள் கடத்தல் சந்தேகநபருக்கு பிணை

கொழும்பு, ஜூன் 15

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 11ஆவது சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வழக்கின் 11 ஆவது சந்தேகநபரான கடற்படையின் சஞ்ஜீவ பிரபாத் சேனாரத்ன உள்ளிட்ட சந்தேகநபர்கள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெத்திகேவிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, 11 ஆவது சந்தேகநபரை தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளிலும், ஒன்றரை இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் செல்ல நீதிபதி அனுமதி அளித்தார்.

சந்தேகநபரின் வெளிநாட்டு பயணங்களுக்கு தடை விதித்த மேல் நீதிமன்ற நீதிபதி, மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு வெள்ளை வானில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

# பொலிஸ் பாதுகாப்புடன் ஏதிலிகள் சிகிச்சைக்காகச் சென்றுவந்தனர்

வவுனியா, ஜூன் 15

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஏதிலிகள் பொலிஸ் பாதுகாப்புடன் வவுனியா மருத்துவமனைக்கு நேற்றுச் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டனர்.




உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக நீர்கொழும்பில் தங்கியிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அகதிகளில் ஒரு தொகுதியினர் இரண்டு கட்டமாக அழைத்து வரப்பட்டு வவுனியா பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 10 பேர் வரையிலானோர் சிகிச்சை பெறவேண்டியிருந்தது. அவர்கள் வவுனியா மருத்துவமனைக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டனர். சுமார் இரண்டு மணிநேரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மருந்துகளைப் பெற்ற பின்னர் மீண்டும் பூந்தோட்டம் மறுவாழ்வு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (த)

# திருமலையில் 5,000 பேருக்கு சமுர்த்தி உரிமம் வழங்கல்

மூதூர், ஜூன் 15

திருகோணமலையில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்து வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இது நடைபெற்றது.

"புதிதாகச் சிந்திப்போம் தன்னம்பிக்கையோடு முன்னேறுவோம்" எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆறு இலட்சம் பயனாளிகளுக்கு சமுர்த்தி உரித்து வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சுமார் 5ஆயிரம் பயனாளிகளுக்குச் சமுர்த்தி உரித்து வழங்கப்பட்டது.

ஆரம்பக் கைத்தொழில் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயாகமகே இதில் கலந்து கொண்டு பயனாளிகளுக்குச்சமுர்த்தி உரிமம் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் அமைச்சர் தயாகமகே, வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளத்துறை பதில் அமைச்சர் அனோமா கமகே, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், அப்துல்லா மஃறூப், எம்.எஸ்.தௌபீக், இம்ரான் மஹரூப், திருகோணமலை மாவட்டச் செயலர் என்.ஏ.ஏ.புஷ்ப குமார உட்பட பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், சமுர்த்தித் திணைக்கள உயரதிகாரிகள், சமுர்த்திப் பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர். (கு)

# பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மைத்திரி, ரணில் விலகட்டும்

## வாசுதேவ ஆலோசனை

கொழும்பு, ஜூன் 15

அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தமக்குள்ள தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

அரசியல் வரலாற்றிலே முதல் முறையாக அரச தலைவர் கருத்து முரண்பாடுகளை காரணம் காட்டி அமைச்சரவை கூட்டம் கூட்டாமல் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்துகின்றார். தலைமை அமைச்சரும் அவரது சகாக்களும் தொடர்ந்து அரச தலைவருடன் முரண்பட்டுக் கொண்டிருந்தால் அரசியல் நெருக்கடி மேலும் தீவிரமடையும்.

தற்போதைய பிரச்சினைகளுக்கு அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இணைந்தே ஒரு தீர்வு காணவேண்டும். ஆனால் நடைமுறையில் இது சாத்தியப்படவில்லை. இரண்டு தரப்பினருக்கும் இடையில் காணப்படுகின்ற தனிப்பட்ட பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள இவர்கள் அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.



இருவரும் இணைந்து செயற்பட வேண்டும் முடியாவிடின் பதவி விலகி முன்கூட்டியே தேர்தல்களை நடத்தி ஒரு நிலையான அரசை உருவாக்கஇடமளிக்கவேண்டும் - என்றார். (எ)

# புத்தர் சிலை உடைப்புச் சம்பவங்கள் ஸஹ்ரான் கட்டளைப்படியே நடந்தன!

## குற்றப்புலனாய்வுப் பிரிவு நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

மாவனெல்லை நகரை அண்மித்த பகுதிகளில் ஒரே இரவில் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் அடித்து சேதமாக்கப்பட்ட சம்பவங்கள், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் ஸஹ்ரான் ஹாஷிமின் உத்தரவுக்கு அமையவே முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்றுமுன்தினம் மாவனெல்லை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்தது.

இந்த விவகாரம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் முற்பகல் மாவனெல்லை நீதிவான் உப்புல் ராஜகருணா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன் போது இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் பிரதான விசாரணை அதிகாரியான சி.ஐ.டியின் சிறப்பு விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மாரசிங்க இதை நீதிவானுக்கு அறிவித்தார்.

இந்த சிலை உடைப்பு விவகாரத்தை பூரணமாக நெறிப்படுத்தியுள்ள ஸஹ்ரான், அதனை முன்னெடுத்த சந்தேக நபர்களுக்கு 'நீங்கள் போய் சிலைகளை உடைத்துவிட்டு என்னிடம் வாருங்கள்' என கூறியுள்ளார் என்றும் விசாரணை அதிகாரி நீதிமன் றின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

இந்த சிலை உடைப்பு விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் மாவனெல்லை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது நீதிமன்றின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே விளக்கமறியலில் உள்ள 14 சந்தேக நபர்கள் கடும் பாதுகாப்புக்கு மத்தியின் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களை விடவும் சி.ஐ.டியின் பிடியில் இந்த விவகாரம் தொடர்பில் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 20 சந்தேக நபர்களும் நேற்று சிறப்புப் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு நீதிவானின் மேற்பார்வைக்காக் முன்னிலையாக்கப்பட்டனர்.

இந்த விவகாரத்தில் இதுவரை கைதாகியுள்ள சந்தேக நபர்கள் 34 ஆவர்.

சந்தேக நபர்களை முற்படுத்திய பின்னர் விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் மாரசிங்க மேலதிக விசாரணை அறிக்கையை முன்வைத்து விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

புத்தர் சிலைகளை தகர்க்கும் இந்த செயற்பாடுகள் சஹ்ரானின் பூரண மேற்பார்வை மற்றும் உத்தரவின் கீழ் இடம்பெற்றுள்ளது என்று சி.ஐ.டி. அதிகாரி நீதிமன்றுக்கு சுட்டிக்காட்டி யுள்ளார். இந்த விவகாரத்தில் கைதாகி விளக்கமறியலில் உள்ள இப்ராஹீம் மௌலவி என்பவரது வீட்டில் இந்த சிலை உடைப்புக்கான வகுப்புக்கள் ஸஹ்ரானால் எடுக்கப்பட்டுள்ளன. வகுப்பின் முடிவில் "சிலைகளை உடைத்துவிட்டு நீங்கள் மீண்டும் என்னிடம் வாருங்கள்" என ஸஹ்ரான் அங்கிருந்த தனது சகாக்களுக்கு கூறியுள்ளார் என்பது சி.ஐ.டி விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்த அதிகாரி நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

சிலை உடைப்பு விவகாரத்தில் சந்தேக நபர்கள் சிலர் சில நாள்களில் கைதான நிலையில் அந்த சந்தேக நபர்களை பிணையில் விடுவித்து க் கொள்ள சட்டத்தரணிகளுக்கு வழங்குங்கள் என்று கூறி ஸஹ்ரான் 20 இலட்சம் ரூபா பணத்தை இப்ராஹீம் மௌலவி எனும் சந்தேக நபருக்கு கொடுத்துள்ளமையும் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் அந்த அதிகாரி நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்கள் 14 பேரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை மீள விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் உப்புல் ராஜகருணா, தடுப்புக் காவலில் உள்ள சந்தேக நபர்கள் 20 பேரையும் மீள நான்காம் மாடியில் தடுத்து வைத்து விசாரிக்கவும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி அவர்களை மேற்பார்வைக்காக மீள நீதிமன்றில் முற்படுத்தவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

இந்த விவகார விசாரணைகளின் போது கைப்பற்றப்பட்ட வெடிபொருள்களை அழிக்க, கேகாலை அதிரடிப்படை கட்டளைத் தளபதிக்கும் இதன் போது நீதிமன்றம் உத்தரவொன்றைப் பிறப்பித்தது.

2018 டிசம்பர் 25 ஆம் திகதி அதிகாலை நேரத்தில் குருணாகல் மாவட்டம் பொதுஹர பொலிஸ் பிரிவின் கட்டுபிட்டிய கோணவல பகுதியில் அமையப்பெற்றுள்ள ஆலயம் ஒன்றில் இந்து கடவுள்களைக் குறிக்கும் உருவச்சிலைகள் அடையாளம் தெரியாதோரால் அடித்து நொறுக்கி சேதமாக்கப்பட்டன. இந்த சம்பவம் தொடர்பில் பொதுஹர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், அடுத்த 24 மணி நேரத்தில் அதாவது டிசெம்பர் 26 ஆம் திகதி இதையொத்த ஒரு சம்பவம் யட்டிநுவர வெலம்பட பொலிஸ் பிரிவில் பதிவானது.

அதிகாலை 3 மணியளவில் வெலம்பட பொலிஸ் பிரிவின் லெயம்கஹவல பகுதியில் மூன்றரை அடி உயரமான புத்தர் சிலை அடையாளம் தெரியாதோரின் தாக்குதலுக்கு உள்ளானது. அந்த மூன்றரை அடி உயரமான புத்தர் சிலை சேதப்படுத்தப்படும் சம நேரத்தில் அதை அண்டிய பகுதியில் இருந்த மேலும் மூன்று சிறு சிலைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

அதே தினம் அதிகாலை 4 மணியளவில் மாவனெல்லை திதுருவத்த சந்தியில் உள்ள புத்தர் சிலையும் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது. இதன் போது தான் இந்த சிலை உடைப்பு விவகார சம்பவங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான தடயமும் கிடைத்திருந்தது. இந்தக் காலப்பகுதியில் மாவனெல்லை பகுதிகளில் நான்கு இடங்களில் சிலைகள் சேதப்படுத்தப்பட்டிருந்தன. அவை இரு பீ அறிக்கைகள் ஊடாக நீதிமன்றுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

மாவனெல்லை திதுருவத்த சந்தியில் புத்தர் சிலையை தாக்க மோட்டார் சைக்கிளில் இருவர் வந்துள்ளனர். இவ்வாறு வந்தனர் என்று கூறப்படும் இருவரில் ஒருவரை பிரதேச வாசிகள் துரத்திப் பிடித்து மாவனெல்லை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அது முதல் இது விவகாரம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையிலேயே தற்போது அவ் விடயத்தில் பல அதிர்ச்சியளிக்கும் விடயங்கள் வெளிப்பட்டுவருகின்றன. (எ)

# உந்துருளி விபத்தில் பாதசாரி உயிரிழப்பு

ஹற்றன், ஜூன் 15

வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, மற்றுமொருவர் படுங்காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து தலவாக்கலை லிந்துலை நகர சபைக்கு அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

தலவாக்கலையிலிருந்து நுவரெலியா பகுதியை நோக்கிச் சென்ற உந்துருளி, தலவாக்கலை லிந்துலை நகர சபைக்கு அண்மித்த பகுதியில் வீதியை கடக்க முயற்சி செய்த பாதசாரதி மீது மோதுண்டதில் விப்த்து இடம்பெற்றது.

மோட்டர் சைக்களின் முன் சில்லில் சிக்குண்டு படுகாயமடைந்த நிலையில் பாதசாரதி லிந்துலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தலவாக்கலை நானுஓயா தோட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தியாகராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், மோட்டார் வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# பெண் வேடத்தில் நடமாடியவர் சிக்கினார்

கொழும்பு, ஜூன் 15

பெண்ணைப் போன்று உடையணிந்து கொண்டு நடமாடிய நபர் ஒருவர் தலவாக்கலையில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு நடந்துள்ளது.

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெவன் தோட்டத்தில் குடியிருப்புகளுக்குப் பின்பகுதியில் ஒருவர் நடமாடும் சத்தத்தை மக்கள் அவதானித்துள்ளனர். அச்சமடைந்த மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரும் தலவாக்கலையைச்சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேநபர் பெண் வேடத்தில் நடமாடியமை தொடர்பான விசாரணைகளைத் தலவாக்கலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# உயித்த ஞாயிறுத் தாக்குதலுக்கு அதிகாரிகளும் பொறுப்பாளிகள்

## சுதந்திரக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 15

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுக்குப் பாதுகாப்பு அதிகாரிகளும் பொறுப்பேற்ற வேண்டும் என சிறி லங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மட்டுமல்ல யாராக இருந்தாலும் அமைச்சரவையைக் கூட்டாதது தவறுதான். ஆனால், அதற்காக உரிய நேரத்தில் கடமைகளை செய்திருக்க வேண்டிய அரச அதிகாரிகள் அரச தலைவர் மீது மாத்திரம் பழி சுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமனத்தில் தலையிடாவிட்டாலும் அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கும், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர். அதற்காக புலனாய்வு தகவல்களை ஊடகங்களில் வெளிப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் தீயை மூட்டிவிட்டு தற்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளால் அமைச்சரவையைக் கூடாமல் இருப்பது மக்களையே பாதிக்கும். தலைமை அமைச்சரும், அரச தலைவரும் சுமூகமான கலந்துரையாடலின் மூலம் அமைச்சரவை தொடர்பான சர்ச்சைக்கு முடிவு காண வேண்டும். - என்றார். (எ)



# 25 வீடுகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமம் திறப்பு

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு ஏறாவூரில் பகுதியில் 25 வீடுகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாச முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு சம்பிரதாயபூர்வமாகத் திறந்தார்.

இதன்போது கடன் திட்டத்தில் இணைக்கப்பட்டவர்களுக்கான காசோலைகள் , கண் பார்வைக்குறைபாடுடையவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் மற்றும் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு தொழில் உபகரணங்களும் கையளிக்கப்பட்டன.

மேலும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அலி ஸாஹிர் மௌலானா, எம்எஸ்எஸ். அமீர்அலி மற்றும் மாகாண முன்னாள் அமைச்சர் எம்எஸ். சுபைர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## பிரபாகரனுக்கு....

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அவரின் இயக்கத்தினருக்கும் எனப் பெரும் ஆதரவுத் தளமிருந்தது. இப்போதும் இருக்கின்றது. அதேவேளை, அவர்களுக்கென்று கட்டமைப்பு இருந்தது. அரசியல் கொள்கை இருந்தது. அவர்களுக்கென்று ஒரு விடுதலைப் போராட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக் காலத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கிளிநொச்சியில் நாம் நேரில் சந்தித்தோம். அவர் எனக்கும் எனது கட்சியினருக்கும் பலத்த வரவேற்பு வழங்கியிருந்தார். சுமார் ஐந்து மணித்தியாலங்கள் எங்களுடன் அவர் மனம் விட்டுப் பேசினார். துரதிஷ்டவசமாக அந்தச் சமாதானக் காலம் நீடிக்கவில்லை. மீண்டும் போர் ஆரம்பமானது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் குறுகிய நோக்கத்தில் இருந்ததில்லை. உரிமைகளைக் கேட்டு நிற்கும் தமிழ் மக்கள் மீதான இராணுவத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர்களின் தாக்குதல்கள் இருந்தன.

பிரபாகரனுக்கு நிகர் அவரே ஆவார். இலங்கையில் இனிமேல் எவரும் பிரபாகரன் ஆகிவிட முடியாது. இந்தநிலையில், பிரபாகரனுடன் இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒப்பிடுவது அறிவீனம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களின் மத்தியிலிருந்து பிரபாகரன் உருவாக இடமளிக்க வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது அபத்தமான ஒன்று.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்திய கும்பலுக்கென்று எதுவுமே கிடையாது. இவர்களுக்கு முஸ்லிம் சமூகத்திடமிருந்து எந்த ஆதரவும் கிடையாது. அப்படியான கும்பல் பிரபாகரன் என்கிற தகுதிக்கு வந்து விடுவார்கள் என்று அச்சப்படுகின்ற அதீதமான அச்சப்போக்கு அபத்தமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை இலங்கை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும், எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஓ.5,22)

## மீண்டும்...

மருத்துவமனையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தியே தொடர்வார். முன்னைய பதில் பணிப்பாளர் தேவநேசன் அந்தப் பதவியிலிருந்து வெளியேறவேண்டும். இவ்வாறு கொழும்பு அரசின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், சுகாதார அமைச்சர் ராஜித தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் செயலர் ஆகியோருடன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சரும் கலந்து கொண்டார். இந்தச் சந்திப்பிலேயே அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியை அந்தப் பணிக்கு மேலதிகமாக, மாகாண நிர்வாகத்தின் கீழான பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராகவும் பணியாற்றுமாறு கொழும்பு சுகாதார அமைச்சு பணித்திருந்தது. மாகாணத்தின் அதிகாரங்களைப் பிடுங்கும் செயற்பாடு என்று இந்த நியமனத்துக்கு எதிராக கருத்துகள் வெளியிடப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், பதில் பிராந்தியப் பணிப்பாளராக சத்தியமூர்த்தியை பணியாற்ற வேண்டாம் என்று எழுத்தில் கடிதம் வழங்கியிருந்தார். கொழும்பு சுகாதார அமைச்சின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. கொழும்பு சுகாதார அமைச்சு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு பதில் கடிதம் அனுப்பியது. மருத்துவர்களின் நியமனம், இடமாற்றம் கொழும்பு அரசுக்கு உரியது. மாகாண சபையின் நியதிச் சட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு கடிதம் அனுப்பியது.

மருத்துவர்கள் நியமனம் கொழும்பு அரசுக்கு உரியதாக இருந்தாலும், மாகாணத்தின் ஒத்துழைப்புடனேயே அவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆளுநரின் செயலர், மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில், அமைச்சர் ராஜித சேனாராட்ன, கொழும்பு அரசு வழங்கிய கடிதத்துக்கு அமைவாக சத்தியமூர்த்தியே பதில் பணிப்பாளராகக் கடமையாற்றவேண்டும் என்று கூறியுள்ளார். (ஓ,5,7)

## ஸஹ்ரானின்...

மாடியில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேர தெரிவித்தார்.

அஹமட் மில்ஹான் என்று அறியப்படும் 30 வயதான ஹயாத்து மொஹம்மட் அஹமட் மில்ஹான், சவுதி அரேபியாவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் இலங்கைக்கு நேற்று அதிகாலை 4 மணிக்கு அழைத்து வரப்பட்டார்.

பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில் பயங்கரவாதி ஸஹ்ரானுக்கு மிக நெருக்கமான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் அனுராதபுர மாவட்ட தலைவராக கருதப்படும் அபுசாலி அபூபக்கர் உள்ளிட்ட மேலும் நால்வரையும், அஹமட் மில்ஹானுடன் சேர்த்துக் குற்றப் புலனாய்வுப் பிரிவு சவுதி அரேபியாவின் ஜித்தாவிலிருந்து கைதுசெய்து இலங்கைக்கு அழைத்து வந்தது.

பயங்கரவாத சந்தேக நபர்களில் பிரதான சந்தேக நபரான அஹமட் மில்ஹான், 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மட்டக்களப்பு வவுணதீவில் பொலிஸார் இருவரைக் கொலை செய்து விட்டு அவர்களின் ஆயுதங்களை கொள்ளையிட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஓ.5)

## வலி.வடக்கு...

ஆலயத்தில் வலி.வடக்கு மீள்குடியேற்ற மறுவாழ்வு சங்கமும், மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்கமும் இணைந்து சிறப்பு பூசை வழிபாடுகளை ஒழுங்கு செய்துள்ளன.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி இராணுவத்தினரின் பலமுனைகளில் வலி. வடக்கின் வளம்கொழிக்கும் பிரதேசங்களான பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, தெல்லிப்பழை உள்ளிட்ட பிரதேசங்களில் தாக்குதல் நடத்தினர். உயிருக்கு அஞ்சிய மக்கள் அங்கிருந்து வெளியேறினர். கையில் கிடைத்த பொருள்களுடன் மீண்டும் தமது ஊருக்கு விரைவில் திரும்பலாம் என்ற நம்பிக்கையுடன் இடம்பெயர்ந்தனர். சொந்த நாட்டினுள்ளேயே ஏதிலிகளாக முகாம்களில், நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்தனர்.

போர் முடிவடைந்த பின்னர் வலி.வடக்கு பகுதி பகுதியாக மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டாலும், இன்னமும் பல பிரதேசங்களில் இராணுவத்தினரின் வன் ஆக்கிரமிப்பிலேயே இருக்கின்றது. பலாலி உள்ளிட்ட பல பிரதேசங்கள் இன்னமும் முழுமையாக மக்களிடம் கையளிக்கப்படவில்லை.

சொந்த நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட 29ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டும், தமது காணிகளுக்குள் விரைவில் கால் பதிக்க வேண்டியும் துர்க்கை அம்மன் ஆலயத்தில் இன்று சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (ஓ.5)

## மதுவிற்பனை...

மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படுகின்றன. (ஓ.5)

## ரிசாத்,...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவர்கள் மூவரையும் பதவி நீக்கக் கோரி நான் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தேன். நான்காவது நாளில் இவர்கள் மூவரும் தாமாகவே பதவிகளைத் துறந்துள்ளனர். அதேவேளை, இவர்களுடன் இணைந்து அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் பதவிகளைத் துறந்துள்ளனர்.

இவர்கள் மூவரையும் காப்பாற்றுவதே முஸ்லிம் அரசியல்வாதிகளின் நோக்கமாக இருக்கின்றது. அதற்காகவே அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் பதவிகளைத் துறந்துள்ளனர்.

ஆனால், ரிசாத், ஹிஸ்புல்லா, அஸாத் சாலி ஆகிய மூவரையும் நாம் தப்பிக்க விடமாட்டோம். ஐ.எஸ்.ஐ.எஸ். தற்கொலைக் குண்டுதாரிகளுடன் தொடர்பு வைத்திருந்த இவர்கள் மூவரையும் அரசு உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் -என்றார். (ஓ,5,22)

## ஆவாக்...

தெரிவித்துள்ளதாக, வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலானது வட மாகாணத்தை மையப்படுத்தி ஆயுத வன்முறையிலும் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வரும் ஆவா குழுவால் நடாத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இவர்களின் பிரச்சினை தொடர்பாக ஜனநாயக ரீதியிலான கலந்துரையாடலை இந்தக் குழுவினருடன் மேற்கொள்ள நான் தயாராக இருப்பதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்துக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையையும் நாட்டின் எந்தப் பகுதியிலுமுள்ள எந்தச் சமூகத்தின் மீதும் மேற்கொள்ள அனுமதிக்க முடியாது. எந்தவொரு பிரச்சினையும் தீர்ப்பதற்கு சிறந்த வழி ஜனநாயக ரீதியிலான கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதேயாகும் என்று ஆளுநர் வலியுறுத்தினார். இதற்காக தான் எந்நேரமும் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நான் நேரிலே சென்று ஆவா குழுவினரை சந்தித்து அவர்களுடைய பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடவுள்ளேன். வடக்கு மக்களின் வாழ்க்கையை சிதைப்பதற்கான காரணம்என்ன என்று வினவவுள்ளதாகவும் தெரிவித்த ஆளுநர், இதற்காக எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி அவர்களைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார் என்றுள்ளது. (ஓ,5,7,105)

## பாடசாலைகளில்...

பணி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும். அதற்கான உடன்படிக்கை சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்படவுள்ளது, என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ஓ,5)

## முன்னணியுடன்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணங்கிப் போவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எந்த இடத்திலும் எவரையும் நான் குற்றம் கூறுவதாக இல்லை. முஸ்லிம்களிடமிருந்து நாம் கற்க வேண்டியது பல இருக்கின்றன.

அவர்கள் அனைவரும் கூட்டாக விலகிய ஒற்றுமையும் ஒன்று, தங்களுக்குள் ஏராளமான பிரச்சினைகள் இருந்தாலும் தங்கள் சமூகத்தை பாதிக்கின்ற விடயம் வருகின்ற போது அவர்கள் ஒன்று சேர்வார்கள். இது இங்கு மட்டும் அல்ல உலகம் முழுக்க காணக்கூடியதாக இருக்கிறது. இதேவேளை தமிழர்களிடையே வேறுவிதமான குணம் காணப்படுகிறது. நாங்கள் மட்டும்தான் விடயங்களை தெரிந்தவர்கள் என்ற வகையில் ஒவ்வொருவரும் நடக்க முற்படுவத னால் தான் எங்களிடையே ஒற்றுமை தடைப்பட்டு இருக்கிறது. முஸ்லிம்களின் இந்தச் சம்பவத்தை வைத்துக்கொண்டு தமிழர்கள் ஒரு பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ஓ.5,214)

## தேசியமட்ட...

இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, க.பொ.த. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாவட்ட நிலை தரப்படுத்தல்கள் வெளியிடப்படும். (ஓ,5)

## சுற்றுலா...

கலாசார பேரவையில் இரண்டாம் மொழி கற்றல் செயற்பாடுகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இங்கு தமிழ் மொழியில் உரையாற்றத் தெரியாமைக்கு மன்னிப்புக் கோருகின்றேன். தமிழ் - சிங்கள மொழிகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வடக்கு மாகாண ஆளுநர் மூன்று மொழிகளிலும் பேசுகிறார். அது அனைவருக்கும் நன்மையாக அமையும். நிகழ்கால அரசியலில் என்ன நடக்கப் போகிறது என்று தெரியவில்லை. வாக்குகளை சேகரிக்க மக்களிடம் செல்லும் அரசியல்வாதிகள் மக்கள் குறைகளைக் கேட்கவும் தேவைகளை நிறைவேற்றவும் செல்வார்களா தெரியவில்லை.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தக் கற்கைநெறி அமைந்துள்ளது. தமிழ், சிங்களம் என்று பாராமல் முஸ்லிம்களுக்கும் இந்தக் கல்வி செல்ல வேண்டும். அதற்கு அரசியல் தலைவர்கள் அந்த இனத்தை அடக்கியாள்வதை நிறுத்த வேண்டும். மாகாண சபைகள் செய்ய முடியாத வேலைகளை ஆளுநர்கள் செய்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. தீவிர தாக்குதலுக்கு பின்னர் முஸ்லிம் மக்கள் மீதான பார்வை தவறாக உள்ளது. அவர்கள் நடுத்தெருவில் உள்ளார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டும். சுற்றுலா செல்லும் அரசியல் தலைவர்கள் இனித் தேவையில்லை. ஆகவே அடுத்த அரசியல் நகர்வு மக்களுக்கு பயன் உள்ளதாக அமைய வேண்டும் - என்றார். (ஓ,5,7)

## சட்டவிரோத...

னாய்வுப் பிரிவில் வாக்குமூலமளித்துள்ளனர்.

சிசேரியன் சிகிச்சைகளின்போது அங்கு இருக்கும் ஏனைய மருத்துவர்கள் மற்றும் தாதியர்களுக்கு தெரியாமல் இவ்வாறான நடவடிக்கைகளை ஒருபோதும் முன்னெடுக்க முடியாது எனவும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

சட்டவிரோத கருத்தடை விவகாரம் தொடர்பில் குருநாகல் மருத்துவமனையின் பிரசவ மற்றும் மகப்பேற்று வைத்தியர் ஷாபி சிஹாப்தீனுக்கு எதிராக குற்றம் சுமத்தப்படும் நிலையில், அவர் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிடியில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

மருத்துவர் ஷாபியுடன் சத்திர சிகிச்சைகளின் போது சத்திர சிகிச்சை கூடங்களில் இருந்தவர்கள் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 70 தாதியர்களை அடையாளம் கண்டனர். அவர்களில் ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக சிகிச்சை பெறும் நிலையில் ஏனைய 69 பேரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளபோதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். (ஓ.5)

## ட்ரம்ப் வகுத்த வியூகம்

# அகதிகளை தடுப்பதில் மெக்சிக்கோ மும்முரம்



மெக்சிக்கோ நகர், ஜூன் 15

அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லை ஊடாக அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழைகின்ற தமது நாட்டு மக்களைத் தடுக்கவேண்டிய நிலைமைக் குள்ளாகியுள்ளது மெக்சிக்கோ.

இந்த நடவடிக்கைக்குத் தேவையான செலவீனங் களுக்காக மெக்சிக்கோ அதிபர்களின் பாவனைக் காகக் கொள்முதல் செய்யப் பட்ட நவீன வானூர்தியை விற்க முடிவு செய்துள்ளார் மெக்சிக்கோ அதிபர் அன்ரஸ் மனுவல் லொபஸ் ஒப்றேடொர். அது மட்டுமல் லாது அரசுக்குச் சொந்த மான 60 வானூர்திகளை யும், 70 உலங்கு வானூர் திகளையும் விற்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

மெக்சிக்கோவின் எல்லை ஊடாக அமெரிக்காவுக்குள் நுழைகின்ற அகதிகளைத் தடுப்பேன் என்று தேர்தல் வாக்குறுதியளித்துக் கடந்த தேர்தலில் வெற்றிபெற்றார் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப். தான் வெற்றிபெற்ற பின்னர் அகதிகளின் நுழைவைத் தடுப்பதற் காக மெக்சிக்கோவின் எல்லையில் சுவர் எழுப்ப முயன்றார். ஆனால், அதற்குரிய பணத்தை ஒதுக்குவதற்கு அமெரிக்கா நாடாளுமன்றத்தின் அனு மதி கிடைக்கவில்லை. இது குறித்த நெருக்கடிக ளும், வாதப்பிரதிவாதங்க ளும் ட்ரம்புக்கும் நாடாளு மன்றத்துக்கும் இடையே நீடித்து வருகின்றன. இந்த நிலையில் மெக்சிக்கோ வின் இறக்குமதிப் பொருள் கள் மீதான வரியை அதிக ரித்தார் ட்ரம்ப். இந்த வரிச் சுமையைக் குறைக்கும்படி மெக்சிக்கோ அரசு கேட் டது.



அதற்கு ட்ரம்ப் ஒரு நிபந் தனை விதித்தார். மெக் சிக்கோவிலிருந்து அமெ ரிக்காவுக்குள் நுழைகின்ற அகதிகளை மெக்சிக்கோ அரசு தடுக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இதற்குச் சம்மதித்த மெக் சிக்கோ அரசு தனது எல் லைப் பாதுகாப்பை அதிக ரிப்பதாக வாக்குறுதியளித் தது.



# பேச்சு மேடைக்கு ட்ரம்ப் தகுதியானவர் இல்லை

### ஈரான் தலைவர் தெரிவிப்பு

தெஹ்ரான், ஜூன் 15

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேச்சுகள் நடத்துவதற்குத் தகுதி யானவர் இல்லை என ஈரான் தலைவர் அயத்துல்லா அலி காமேனி தெரிவித்தார். ஈரான்-அமெரிக்கா இடையில் முரண்போக்கு நீடித்துவரும் நிலையில், அவற்றுக்கிடையே போர் மூளும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜப்பானின் தலைமை அமைச்சர் ஷின்ஜோ அபே 3 நாள் பயணமாக ஈரான் சென்றார்.

நேற்றுமுன்தினம் அவர் ஈரான் அதிபர் ஹசன் ருஹானி யைச் சந்தித்தார். அதன் பின்னர் இருவரும், ஈரானின் அதிகாரம் வாய்ந்த தலைவரான அயத்துல்லா அலி காமே னியைச் சந்தித்துப் பேசினர். ஈரான் - அமெரிக்கா இடையி லான பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வுக்காண்பதற்கு ட்ரம்ப் விரும்புவதாக ஷின்ஜோ அபே கூறினார். அதன் போதே அயத்துல்லா அலி காமேனி, ட்ரம்ப் பேச்சு நடத்து வதற்குத் தகுதியானவர் இல்லை - என்றார்.

# நியூசிலாந்தின் மசூதித் தாக்குதல் குற்றங்களை ஏற்காத சந்தேகநபர்

வெலிங்டன், ஜூன் 15


நியூசிலாந்தின் கிறிஸ்ட்சேர்ச் நகரிலுள்ள மசூதி மீது கடந்த மார்ச் மாதம் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் துடன் தொடர்புடையதாகக் குற்றம்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத் தார். நியூசிலாந்து மசூதி யில் நடந்த இந்தத் துப்பாக் கிச் சூட்டுத் தாக்குதலில் 51 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டை நிகழ்த்திய தாகப் பிரென் டன் டாரன்ட் என்பவர் தன் னுடைய முகநூலில் அதை நேரலையாகப் பதிவிட்டார். நியூசிலாந்துப் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டார். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரென்டன் இந்த வழக்கு விசாரணை களுக் காகப் பின்னர் நீதி மன்றத் தில் முன்னிலையானார். நீதிமன்றில் எதிர்த் தரப்புச் சட்டத்தரணி தனது தரப்பு நியாயத்தை நீதிபதிக்குத் தெரிவித்தபோது அமை தியாக அமர்ந்திருந்த அவர் பின்னர் தன்மீதான குற் றத்தை மறுத்தார். இதனால் நீதிமன்றில் சல சலப்பு ஏற்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் உறவுகளை இழந் தவர்கள் கண்ணீர் விட்டுக் கதறினர்.

**பின்னணி**

கிறிஸ்ட்சேர்ச்சில் உள்ள அல் நூர் மசூதி மற்றும் லின்வுட் இஸ்லாமிய மையம் ஆகி யவற்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடையதா கக் குற்றம்சாட்டப்படும் சந் தேக நபராக ஆஸ்திரேலி யாவைச் சேர்ந்த பிரென்டன் டாரன்ட் என்பவரைக் கைது செய்தனர் நியூசிலாந்துப் பொலிஸார். அல் நூர் மசூ திக்குச் சென்று தனது வாக னத்தை நிறுத்திவிட்டு மசூதியில் துப்பாக்கிச் சூடு நடத்தியதும், அங்குள்ள முதன்மை வாயில் வழி யாக மசூதிக்குள் நுழைந்து ஐந்து நிமிடங்கள் வரை சரமாரியாக அவர் சூட்டில் ஈடுபட்டதுமான நிகழ்வுகள் சூட்டில் ஈடுபட்ட நபர் தனது தலையில் பொருத்தியி ருந்த கமரா மூலமாக முக நூலில் நேரலையாக ஒளி பரப்பாகினார். அந்த முக நூலுக்குச் சொந்தக்காரா னன பிரென்டன் டாரன்ட் கைது செய்யப்பட்டார். அதன் பிறகு 5 கிலோ மீற் றர் தொலைவில் உள்ள லின்வுட் மசூதிக்கும் சென்று இந்தச் சந்தேக நபர் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட தாகக் குற்றம் சாட்டப்பட்டுள் ளது.

இவர் ஆக்லாந்துச் சிறை யில் தனிமையில் அடைக் கப்பட்டுள்ளார். இந்தச் சிறை நியூசிலாந்தின் கடுமை யான சிறைகளில் ஒன்றா கக் கருதப்படுகிறது.



# ஜப்பான் பெண்கள் ஒன்றிணைந்து உயர்குதிக் காலணிக்கு எதிர்ப்பு

டோக்கியோ, ஜூன் 15


ஜப்பானைச் சேர்ந்த பெண்களில் அதிகளவா னோர் உயர்குதியையுடைய பாதணிகள் அணிவதை விரும்பவில்லை. அங்குள்ள அலுவலகங்களில் பெண்கள் உயர்குதியை உடைய பாதணிகளே அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகின்றது. உயர் குதியை உடைய பாதணியை அணிய மாட்டோம் என்கிறார்கள் அவர்கள். அவ்வா றான பாதணியை அணிவதால் ஒருவித வலியை அனுபவிக்கவேண்டியிருப்பதாக வும் குறித்த பெண்கள் கவலை தெரிவிக்கி றார்கள். இதுகுறித்த எதிர்ப்பு நடவடிக்கை யைத் தொடங்கியுள்ளார் ஜப்பானிய நடி கையும் எழுத்தாளருமான யூமி இஷிகவா என்கிற பெண்.

இது ஒரு பாலியல் பாகுபாடு.

இதைப் பொறுத்துக் கொண்டு வாழவே நாம் கற்றுக்கொண்டுள்ளோம் என்று கூறுகின்ற அவர், இதற்கு முற்றுப்புள்ளியீட வலியுறுத் துகின்ற தீர்மானம் ஒன்றைத் தயாரித்து அதில் 18ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களிடம் கையெழுத்து வாங்கி அதை அரசிடம் ஒப்ப டைத்தார்.

ஆனால், ஜப்பானின் சுகாதார மற்றும் தொழில் அமைச்சர் அந்தக் கோரிக்கையை நிராகரித்தார். உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள பாலியல் சமத்துவப் பட்டிய லில் ஜப்பான் 110ஆவது இடத்தில் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

# இந்தியாவின் 'சந்திரயான் - 2' அடுத்த மாதம் விண்ணில் பாயும்




புதுடெல்லி, ஜூன் 15

நிலவில் ஆராய்ச்சியில் ஈடுபடும் நோக்கில் இந்தியா தயாரித்துவரு கின்ற சந்திரயான் -2 விண்கலம் அடுத்த மாதம் 15ஆம் திகதியன்று விண்ணில் ஏவப்படும் என்று இந் திய விண்வெளி ஆராய்ச்சி மைய மான இஸ்ரோ அறிவித்தது. இந்த விண்கலம் தரையிறங்குவதற் காக உள்ள ஒரு கலனையும் (லேண்டர்), சுற்றுவட்டப்பாதை யிலிருந்து ஆய்வு செய்வதற்காக செயற் கைகோள் போன்ற ஒரு கலனையும் (ஆர் பிட்டர்), நிலவின் மேற்பரப்பை ஆராய்வதற் காக ஒரு வாகனத்தையும் (ரோவர்) கொண்டதாக மூன்று பகுதிகளை உள்ளடக் கியதாகத் தயாரிக்கப்பட்டது என்று தெரிய வருகிறது.

கப்பல்கள் தாக்கப்பட்ட விவகாரம்


# அமெ.வின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது ஈரான் அயலுறவு அமைச்சகம் தெரிவிப்பு






தெஹ்ரான்.ஜூன்15
ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைரா துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என அமெரிக்க அயலுயுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ குற்றம் சாட்டினார்.
இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்க முடியாது என்று அமெரிக்காவுக்கு ஈரான்பதிலளித்துள்ளது. ஈரான்அயலுறவுத்துறை அமைச்சகமே இவ்வாறு தெரிவித்தது. இந்தத் தாக்குதல் குறித்துத் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாக அமெரிக்கா தெரிவித்திருந்த நிலையில், ஓமன் வளைகுடாவில்எண்ணெய்கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஈரான் நாட்டுஅரசுதான்பொறுப்பேற்கவேண்டும்என அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ குற்றம் சாட்டினார். இந்தநிலையிலேயேஅமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டானது அடிப்படை ஆதாரங்கள் ஏதுமின்றி எங்கள் மீது சுமத்தப்படு கிறது என்று ஈரான் கூறியுள்ளது. இந்தக் கப்பல்கள் மீதான தாக்குதலையடுத்து பெட்றோலியப்பொருள்களின்விலைபன்னாட்டளவில் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எதிர்வுகூறப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**
சவூதி அரேபியாவுக்கும், ஈரானுக்கும் இடையேநீண்டகாலமாகப்பகைமை நிலவிவருகிறது. சவூதியின்நட்புநாடாக அமெரிக்காஉள்ளது. ஈரானுடன்அமெரிக்கா செய்திருந்த அணு உடன்படிக்கையில் இருந்து ட்ரம்ப் அதிபரானவுடன்அமெரிக்காவிலகியது. ஈரான்மீது தடைகளை விதித்தது.
அமெரிக்காவுக்கும்ஈரானுக்கும்இடையேயும் முரண்போக்கு அதிகரித்தது. இந்த நிலையில் அமெரிக்காவின் போர்க்கப்பல் வளைகுடாப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.
அத்தோடு வளைகுடாப் பகுதியில் 4 எண்ணெய்கப்பல்கள்மீதுவெடிகுண்டுத்தாக்குதல்கள்நடத்தப்பட்டன. தாக்குதலுக்கு உள்ளான 4 கப்பல்களில் 2 சவூதிஅரேபியாவுக்குச்சொந்தமானது என்பதால் அமெரிக்கா இந்த விவகாரத்தைக் கையில் எடுத்து ஈரானை மிரட்டிவருகிறது.





## ஆப்கானில் ஐ.எஸ். தாக்குதல் 11 பேர் பரிதாபச் சாவு

காபுல்.ஜூன்15
ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஜலாலாபாத் நகரில் பொலிஸ் சோதனைச்சாவடி மீது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 11 பேர் சாவடைந்தனர்.
வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட மகிழுந்தைப் பொலிஸாரின் சோதனைச்சாவடியுடன் மோதி வெடிக்கச் செய்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 13 பேர் படுகாயம் அடைந்தனர்.
சாவடைந்தவர்களில் 6 பேர் பொலிஸார் என்றும், ஒரு குழந்தைஉட்பட5பேர்பொதுமக்கள்எனவும்கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புப் பொறுப்பேற்றுள்ளது. கடந்த மே மாதம் மட்டும் 3 குண்டுவெடிப்புச் சம்பவங்கள் ஜலாலாபாத் பகுதியில் நடைபெற்றிருப்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## தமிழகத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ்! துரித சோதனைகள் ஆரம்பம்

கோவை.ஜூன் 15
இந்திய தேசியப் புலனாய்வுத் துறையினர் நேற்று முன்தினம் தமிழகம் - கோவையில் ஏழு இடங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பின்னர் நேற்றுத் தமிழ்நாடு மாநில உளவுத்துறையினரும் கோவை மாவட்டச் சிறப்பு உளவுப் பிரிவினரும் கோவை உக்கடம் அருகில் மூன்று இடங்களில் சோதனை நடத்தினர்.
உக்கடம் பகுதியைச் சேர்ந்த முகமது உசேன், ஷாஜஹான், கரும்புக்கடையைச் சேர்ந்த சேக் சபியுல்லா ஆகியோரின் வீடுகளே இலக்கு வைக்கப்பட்டு நேற்று அதிகாலை இந்தச் சோதனை நடந்தது. பின்பு மேற்குறித்த மூன்று நபர்களையும் நுண்ணறிவுத் துறையினர் தமது அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்து வருகின்றனர்.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத் தமிழகத்துக்குள் ஊடுருவியிருப்பதைக் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக உருவாக்கப்பட்ட சிறப்புப் படையே இவ்வாறான சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகக் கூறப்படுகிறது.
கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி, உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் நிகழ்ந்த குண்டுவெடிப்பின் முக்கிய சூத்திரதாரியாகக் கருதப்படுகின்ற சஹ்ரானுடனும், குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட்ட மற்றைய நபர்களுடனும் கோவை உக்கடம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர்கள் மூவரும் முகநூல் மூலம் நட்பில் இருந்ததாகத் தகவல் வந்ததன் அடிப்படையிலேயே அவர்கள் விசாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.





## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் செயல்களில் சத்தியத்தின் தன்மை நிறைந்திருக்கும். நண்பரிடம் பெற்ற உதவிக்கு நன்றி சொல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உருவாகும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** இனிய வார்த்தை பேசுவீர்கள். வாழ்க்கைத் தரம் வியத்தகு அளவில் உயரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற நண்பர்களின் உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் காணப்படும்.

**மிதுனம்:** உறவினரின் பாசம் வியப்பைத் தரலாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது அவசியம். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** சொந்தப்பணியை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர், உறவினரை குறை சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்; பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** பணிகள் நிறைவேற முன்னேற்பாடு செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளை பிறரிடம் சொல்ல வேண்டாம்.

**கன்னி:** எதிர்மறையாக பேசுவோரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நேரம் தவறாமையை பின்பற்றுவது அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** உங்களின் அணுகுமுறை மாற்றம் நல்லபலன் தரும். அக்கம் பக்கத்தவர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் செய்வதை தவிருங்கள். சுயநலத்துடன் சிலர் உதவ முன்வருவர். வீட்டுக்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள்.

**தனுசு:** ஒருமுகத் தன்மையுடன் செயல்படுவீர்கள். தாமதமாகிய பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும், அதிக அளவில் பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் நற்செயல் நண்பரிடம் பாராட்டு பெறும். தொழிலில் உங்கள் கடுமையான உழைப்பினால் புதிய சாதனை புரிவீர்கள். உபரி பணவரவு சேமிப்பாகும்.

**கும்பம்:** உங்கள் பேச்சு, செயல் மாறுபடலாம். நண்பரின் வழிகாட்டுதல் நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும்.

**மீனம்:** உங்கள் பேச்சு, செயலில் முரண்பாடு ஏற்படலாம்; நல்லோரின் ஆலோசனை, நன்மை பெற உதவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடமாராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பேர் கொண்ட வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. அதில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்திவேல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாண்ம், ஜூன் 15
ஞானம்ஸ் பெயின்ஸ், யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விஜயரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண ரி20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றன.
இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மதியம் 11.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மதியம் 2.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரி.சி.சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஜூன் 15
நேதாஜி விளையாட்டுக் கழகம் வல்வைக்குட்டபட்ட மென்பந்துத் துடுப்பாட்ட அணிகளுக்கு இடையே நடத்திவரும் அணிக்கு 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன. (எ-23)

# தெல்லிப்பழை யூனியன் வலைப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவுப் பெண்கள் வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவானது.
இந்த இறுதியாட்டம் நேற்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.
இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது.
அதில் 34:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (எ-23)



# சண்டிலிப்பாய் இந்து மகளிர் வலைப்பந்தில் வாகை சூடினர்

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களிற்கான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.
16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 20:5 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலய அணி பெற்றது. (எ-422)




## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன்15
நேதாஜி விளையாட்டுக் கழகம் வல்வைக் குட்டபட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திவரும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால் பந்தாட்டத் தொடரில் நேதாஜி விளையாட்டுக்கழக அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. நேற்றுமுன்தினம் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நேதாஜி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தீருவில் விளையாட்டுக்கழக அணி மோதியது. அதில் 3:0என்ற கோல் கணக்கில் நேதாஜி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)

---

நேதாஜி விளையாட்டுக் கழகம் வல்வைக் குட்டபட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திவரும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால் பந்தாட்டத் தொடரில் றெயின்போ விளையாட்டுக்கழக அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. நேற்று முன்தினம் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் றெயின்போ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சைனிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 1:0என்ற கோல் கணக்கில் றெயின்போ விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)

---


வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்வதிரிடயமன்ஸ்விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துகான கால்பந்தாட்டத் தொடரில் சக்திவேல் விளையாட்டுக்கழக அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. நேற்றுமுன்தினம் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் சத்திவேல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமனிலை தகர்ப்பு உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)

---

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துகான் கால்பந்தாட்டத் தொடரில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. நேற்றுமுன்தினம் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி களமிறங்கியது. அதில் 6:0 என்ற கோல் கணக்கில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)

# அராலி சரஸ்வதி பெண்கள் வலைப்பந்தில் பெருவெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 15
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதியாட்டங்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி ஆட்ட நேர முடிவில் 30:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அணி பெற்றது. (எ-422)










# தீவுகளை கலங்கடித்து இங்கிலாந்து அபாரம்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 19ஆவது போட்டியில் இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் மேற்கிந்தியத்தீவுகள் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. மேற்கிந்தியத்தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர்களை இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் மிரட்டி இருந்தனர் என்றுதான் கூறவேண்டும். வழமைக்கு மாறாக மேற்கிந்தியத் தீவுகள் அணி தடுமாறியிருந்தது. மேற்கிந்திய வீரர்கள் துடுப்பெடுத்தாடக் களமிறங்கினால் எதிரணிக்கு கலக்கம் ஏற்படும் ஆனால் நேற்றைய போட்டியில் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களைக் கண்டு மேற்கிந்திய வீரர்கள் கலங்கியிருந்தனர் என்று கூறலாம். மேற்கிந்திய அணி வீரர்கள் தங்களுடைய ஆரம்ப துடுப்பாட்டத்தில் நிலையானதொரு அடித்தளத்தை இடவில்லை. மேற்கிந்திய அணியைப் பொறுத்த வரைக்கும் அதிரடியான சிறப்பான துடுப்பாட்ட வீரர்களின் வரிசைகள் இருந்தும் நேற்றைய போட்டியில் தடுமாறியிருந்தனர். எல்லோரும் எதிர்பார்த்த ரசல் வந்த வேகத்தில் 2 ஆறு ஓட்டங்கள், ஓர் நான்கு ஓட்டத்தை அடித்து விட்டு நடையைக் கட்டினார். அணியின் நிலையை உணர்ந்து போரன் மட்டுமே பொறுப்புடன் ஆடியிருந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 350 ஐ தாண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அணி 44.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 212 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சைப் பொறுத்த மட்டில் ஆர்ச்சர், வூட் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆர்ச்சர் மேற்கிந்திய துடுப்பாட்ட வீரர்களை நிலைய குலையச் செய்திருந்தார் என்று கூறலாம்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 33.1 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தது. அணியின் ஆரம்பம் சிறப்பாகக் காணப்பட்டது. ஜோய் ரூட் ஆட்டமிழக்காது தனது சதத்தை பதிவு செய்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். புள்ளிகள் அடிப்படையில் இங்கிலாந்து அணி 4 போட்டிகளில் 3 போட்டிகளில் வெற்றி பெற்று, ஒரு போட்டியில் தோல்வியடைந்து 6 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. நியூசிலாந்து அணி தொடர்ந்து முதலிடத்தில் காணப்படுகின்றது.




## கோபா கால்பந்து போட்டி நேற்று கோலாகல ஆரம்பம்

பிரேசில், ஆர்ஜென்டினா உட்பட 12 அணிகள் பங்கேற்கும் கோபா அமெரிக்கா கால்பந்து போட்டி பிரேசிலில் நேற்று ஆரம்பமாகியது.

புகழ்பெற்ற கோபா அமெரிக்கா கால்பந்து போட்டி, தென் அமெரிக்க கண்டத்து அணிகளுக்காக நடத்தப்படுவது ஆகும். இதன்படி 46ஆவது கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் பிரேசிலில் நேற்று ஆரம்பமாகியது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் வரை இடம்பெறும். இதில் 10 தென்அமெரிக்க அணிகளோடு ஆசிய கண்டத்தை சேர்ந்த ஜப்பான், கட்டார் ஆகிய அணிகள் சிறப்பு அழைப்பின் பேரில் கலந்து கொள்கின்றன.

8 முறை சம்பியனான பிரேசில் அணியில் முன்னணி வீரர் நெய்மர் காயம் காரணமாக விலகியுள்ளார். இருப்பினும் பிலிப் லூயிஸ், பிலிப் காட்டினோ, டேனி ஆல்வ்ஸ், வில்லியன், தியாகோ சில்வா உள்ளிட்டோர் அணிக்கு வலு சேர்க்கின்றனர். 14 தடவைகள் சம்பியனான ஆர்ஜென்டினா அணியில் நட்சத்திர வீரர் மெஸ்சி மீது எதிர்பார்ப்பு நிலவுகிறது. இதுவரை சொந்த அணிக்காக பெரிய அளவிலான கிண்ணத்தை வென்றுதராத அவர் இந்த முறை மாற்றிக் காட்டுவார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. இந்த ஆட்டங்கள் உள்ளூர் நேரடிப்படி இரவு 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

### பாகிஸ்தானுக்கு எதிராக

## வகுத்துள்ள வியூகங்களை சிறப்பாக செயற்படுத்துவோம்

### கோக்லி சூளுரை



நடப்பு உலகக் கிண்ணத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தியா -பாகிஸ்தான் ஆட்டம் இடம்பெறவுள்ளது. இது இரண்டு நாட்டு ரசிகர்களும் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் உள்ளனர்.

கடந்த போட்டியில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதவிருந்தன. இந்தப் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது. அதன் பின்னர் இந்திய அணித் தலைவர் தெரிவிக்கையில்;

இந்தப் போட்டி கைவிடப்பட்டது நன்மையே ஏனெனில் எப்போதுமே வீரர்களின் பாதுகாப்புதான் முக்கியம். இல்லையென்றால் வீரர்களுக்கு காயம்தான் ஏற்படும்.

இரண்டு அணிகளும் இதுவரை விளையாடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளனர். இதனால் இந்த ஆட்டத்தில் புள்ளியை பகிர்ந்து கொள்வது மோசமானதல்ல.

அடுத்து நாங்கள் பாகிஸ்தானுடன் மோத இருக்கிறோம். இந்த போட்டியை வைத்து உணர்வு பூர்வமான சூழல் நிலவுவதால் முதல் முறையாக உலகக் கிண்ணத்தில் விளையாடும் வீரர்களுக்கு நெருக்கடி ஏற்படலாம். ஆனால் களத்துக்குசென்றுவிட்டால் எல்லாமே அமைதியாகி விடும். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிக்கு வகுத்துள்ள வியூகங்களை செயற்படுத்துவோம்.

இது போன்ற மிகப்பெரிய ஆட்டத்தில் விளையாடுவது மிகப்பெரிய கௌரவமாகும். இத்தகைய ஆட்டங்கள் எங்களது முழு திறமையை வெளிக் கொண்டு வரும். இதனால் பாகிஸ்தானுடன் சிறப்பாக விளையாடுவோம்.

தவானுக்கு கை விரலில் ஏற்பட்டுள்ள காயம் விரைவில் குணமடைந்து விடும் என்ற நம்பிக்கை உள்ளது. அவர் லீக் சுற்றின் இறுதிக் கட்டத்திலும், அரை இறுதியிலும் விளையாடுவார் என்று நம்புகிறேன் - என்றார்.

# ஐ.சி.சி மீது குற்றம்சாட்டுகிறது இலங்கை கிரிக்கெட் சபை

நடப்பு உலக கிண்ணப்போட்டிகளில் இலங்கையை பன்னாட்டுக் கிரிக்கெட் சபை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடத்துகின்றது என இலங்கை கிரிக்கெட் சபை குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து இலங்கை அணியின் முகாமையாளர் அசந்தடிமெல் தெரிவித்ததாவது;

இலங்கை அணி விளையாடும் போட்டிகளுக்காக தயாரிக்கப்பட்ட ஆடுகளங்கள்,பயிற்சிக்கான வசதிகள், இலங்கை வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்கள் **வீரர்களுக்கான போக்குவரத்து வசதிகள்** உட்பட பல விடயங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் பத்து அணிகள் பங்கேற்கின்றன. அணிகள் அனைத்தையும் ஒரே மாதிரியாக நடத்த வேண்டும்.

இதுவரை நாங்கள் விளையாடிய நான்கு ஆடுகளங்களும் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானவை ஆனால் ஏனைய அணிகள் விளையாடிய ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமானவை.

**ஆஸ்திரேலியாவுடன் எதிர்வரும்** சனிக்கிழமை விளையாடவுள்ள ஆடுகளம் வேகப்பந்துவீச்சாளர்களுக்கு சாதகமானதாக காணப்படுகின்றது. சில அணிகளுக்கு ஒருவகை ஆடுகளத்தையும் ஏனைய அணிகளுக்கு வேறு விதமான ஆடுகளங்களையும் தயாரிப்பது நியாயமற்றது.

இலங்கை அணியின் போக்குவரத்துக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ள பேருந்தில் போதிய ஆசனங்கள் இல்லை. ஆனால் பாகிஸ்தான் அணிக்கு மிகவும் வசதியான பேருந்தை வழங்கியுள்ளார்கள்- என்றார்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14.06.2019 | வெற்றி வாரம் 2539 | வர்ணம் நீலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 14 36 38 41
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,127,842 /=
16.06.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**பதவி வெற்றிடம்**
**NGC**
**Northern Group of Company**

வடக்கில் அமைந்துள்ள எமது **NGC** நிறுவனத்துக்கு நான்கு வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன. முந்தும் பன்னிரெண்டு பேருக்கு முன்னுரிமை வழங்கப் படும். வெளிமாவட்டத்தில் உள்ளவர்களுக்கு தங்குமிடம், உணவு இலவசம். உடன் தொடர்பு கொள்ளவும். **(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)**
**வயது எல்லை - 18 - 35 வரை**
**தகைமை - குறைந்த பட்ச தகைமை**

இல.646, முதலாம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 790 4574, 077 283 7638, 077 998 7699

**Jaffna College Institute Of Agriculture**
தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள்
க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்தோர் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர்
தேசிய தொழிற்தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture** ( விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சி நெறிகள் )
1. தேசிய தொழிற்தகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி) -
தகைமை - க.பொ.த. சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16-24 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (ஒரு வருட காலப்பயிற்சி நெறி)
தகைமை - NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த. சாதாரணதரம் சித்தியடைந்திருப்பதுடன் 16 - 26 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். பயிற்சிக் கட்டணம் இலவசம்.
பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் **27.06.2019 காலை 9.00 மணிக்கு** எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்குப் **பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வி தகைமை சான்றிதழ்கள், கிராம சேவையாளரின் நற்சான்றுப் பத்திரம், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் பதிவுக் கட்டணம் ரூபா 1000.00** உடன் நேரில் சமுகமளிக்கவும்.
மேலதிக விபரங்கள்:- பயிற்சிநெறி இணைப்பாளர், மருதனார்மடம், சுன்னாகம்.
தொலைபேசி இலக்கம் :- 021 224 1420
*E.Mail:- jcinstituteofagriculture*

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
. V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 22.06.19 சனி காலை 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 24.06.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.



# "தூயஒளி" இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன்

யாழ்ப்பாணம், ஜூன் 15
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் சூசையப்பர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் இறுதி ஆட்டத்துக்குத் தெரிவானது. (எ-23)

**வேலையாள்கள் தேவை**
தருமபுரத்தில் இயங்கும் மரக்காலைக்கு மரத்தளபாடங்கள் செய்யக்கூடிய வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 0740 796

# விளையாட்டை விளையாட்டாக பார்க்கவும்

*சானியா மிர்சா காட்டம்*

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போட்டி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் ஊடகங்கள் மாறி மாறி விளம்பரங்களை வெளியிட்டு வருகின்றன. இதில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஊடகமொன்று அபிநந்தன் விடுதலை செய்யப்பட்டபோது சமூக வலைதளங்களில் வைரலான உரையாடலை நகைச்சுவையான முறையில் இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் ஆட்டத்துடன் தொடர்புபடுத்தி வெளியிட்டுள்ளது. தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவலாகப் பேசப்பட்டது. இந்த விளம்பரத்துக்கு இந்திய ரசிகர்கள் சமூக வலைதளங்களில் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.




இந்த நிலையில் இது குறித்து சானியா மிர்சா கருத்து தெரிவிக்கையில்;

இருதரப்பிலிருந்தும் தர்மசங்கடமான விளம்பரங்கள் உள்ளன. நீங்கள் இந்த விளையாட்டை இதற்கு மேலும் விளம்பரப்படுத்தத் தேவையில்லை. குறிப்பாக குப்பையாக ஏற்கனவே போதுமான அளவு கவன ஈர்ப்பு பெற்றுவிட்டது.

இது வெறும் விளையாட்டு. ஒருவேளை நீங்கள் இதை விளையாட்டைவிடப் பெரிதாக நினைத்தால் வாழ்க்கையைத் தேடுங்கள் - என்றார்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 19 . 01 . 1950
இறப்பு 14 . 06 . 2019

## சின்னையா நாகமுத்து

வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நாகமுத்து 14.06.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் ஆருயிர்க் கணவரும் பத்மலோஜினி, காலஞ்சென்ற பிறேமலதா(கலா) மற்றும் செல்வரூபினி (மந்திகை ஆதார வைத்தியசாலை), நவனீதராஜா (வேலை மேற்பார்வையாளர் - பருத்தித்துறை பிரதேசசபை), பிரதீபராஜா(சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல் துறை, யாழ் . பல்கலைக்கழகம்), றஜிதா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புலேந்திரன், காலஞ்சென்ற கணேஸ்வரன் மற்றும் சோபனா, ஸ்ரீதேவி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவை நிலையம், புத்தூர்), எட்றொசான் (எபி - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுர்ஷா, துபாஷன், சுஜீவன், சுஜீவா, ரனேஷன், சேஷ்மிகா, தருண், நிருண், எனிசன்(சுவிஸ்), எயானா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் குமாரவேலு, நாகரத்தினம், செல்லையா, சிவகுரு பகவதி, தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அன்னராசா மற்றும் செல்லம்மா, அன்னம்மா, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் சிவயோகம், காலஞ்சென்ற சின்னராசா மற்றும் சிவகமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணேசலிங்கம் (சுவிஸ்), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் சித்தப்பாவும் கணேசதாஸ்(ஜேர்மனி), மல்லிகாமலர்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வாதரவத்தையில் உள்ள (பாடசாலை முன்பாக) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வாதரவத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

**வாதரவத்தை, புத்தூர்.**
(CS 26015)(14,17)
**தகவல்: குடும்பத்தினர்.**
**077 991 2336/ 077 933 5992**

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 779 | சீட்டிழுப்பு திகதி 14.06.2019
வெற்றி இலக்கங்கள் 04 14 49 57 O
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 27,304,796/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 987
சீட்டிழுப்பு திகதி 2019.06.13 வியாழக்கிழமை
V 13 25 46 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,664,780/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 639
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,101,650/-
வெற்றி இலக்கங்கள் 14 52 65 70 M

**British College of Higher Studies**
IELTS Academic / General Student / Migration visa
IELTS Life skills (A1, B1) திருமணமாகி செல்பவர்களிற்கு
for students or spouse who wish to proceed to
**Australia, U.K, Canada, USA & New Zealand.**
- Course duration - 2 months (T & C Applied)
- Highly experienced lecture panel
- Week day & weekend batches
- Individual attention

100 % success level assured
Sirambiyady lane, off Stanley road, Jaffna. Call: 021 222 4550

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.